


# தினப்புயல்

THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -325



## ஈழத் தமிழருக்கு கேடுவிளைவித்த ஒரு சிங்களத் தலைவரே சரத் பொன்சேகா

## இலங்கையில் அவசியமற்றதொன்றாக மாறும் நீதி அமைச்சு

## வடகிழக்கு அரசியல் பற்றி தெரியாதவர்கள் பாராளுமன்றத்தில் கொக்கரிக்கின்றார்கள்

# இலங்கையில் அவசியமற்றதொன்றாக மாறும் நீதி அமைச்சு

இன்றைய காலகட்டத்தில் நீதி மறுக்கப்பட்டு, நியாயம் ஏற்றுக்கொள்ளப்படாது தொடர்ந்தும் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக அநீதிகளே இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. சிறுபான்மை இனங்களை அரசாங்கம் இன்று வரை இனச்சுத்திகரிப்புக்கு உட்படுத்தியே வருகின்றது. இந்த இனச் சுத்திகரிப்பு விடயத்தில் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் திட்டமிட்டு செயற்பட்டு வந்தமை உலகறிந்த உண்மை. சுருக்கமாகச் சொல்லப்போனால் 1983-2009 வரை இந்த நாட்டில் தமிழினத்திற்காக இறுதிவரை போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளை அழித் தொழிக்க வேண்டும் என்கிற நடவடிக்கைகளில் கடந்த கால அரசுகள் ஈடுபட்டன.

இன்றைய சூழ்நிலையில் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த முஸ்லீம்களையும் இந்த அரசாங்கம் தனது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சிக்கின்றது. தமிழினப் படுகொலைகளைத் தொடர்ந்து தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள் மீதும் இனச்சுத்திகரிப்பொன்றை யுத்தம் நிறைவடைந்ததன் பின்னரும் அரசு மேற்கொள்கின்றது.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் என்பதை அரசாங்கம் இல்லாதொழிக்க அனைத்து நடவடிக்கைகளையும் சர்வதேச உள்ளுர் ரீதியாக மேற்கொண்டு வருகின்றது. ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி அமெரிக்கா, இந்தியா, சீனா உட்பட 30இற்கும் மேற்பட்ட நாடுகளுடன் கைகோர்த்து போரை முடிவுக்குக் கொண்டுவந்தது இலங்கையரசு. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் இந்த நாட்டில் ஒரு சிவில் நிர்வாகம் நீதியாக இயங்குவதற்கான ஒரு காலச் சூழலை ஆட்சிக்கு வந்த கடந்த கால அரசாங்கங்கள் மற்றும்தற்போதைய அரசு மேற்கொண்டிருக்க வேண்டும். அதனை விடுத்து இந்த நாடு பௌத்தர்களுக்குரியது. தமிழ் - முஸ்லீம் மக்கள் தமக்கு அடிமையானவர்கள் என்கிற தோரணையில் கடந்த அரசாங்கங்களை விட தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய தலைமையிலான அரசாங்கம் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. அடக்குமுறைகள் உச்சம் என்று கூறுமளவிற்கு தற்போதைய நிலைமைகள் காணப்படுகிறது. சிங்களவர்கள் அனுபவிக்கக்கூடிய அதே உரிமைகள், சுதந்திரத்தை தமிழ் மக்களும் பெறவேண்டும் என்பதைத் தான் விடுதலைப்புலிகளும் கேட்டார்கள். விடுதலைப்புலிகளின் மௌனிப்பின் பின்பும் தமிழினம் இதனைத் தான் தற்போதும் கேட்கிறார்கள்.

முப்பது வருடங்களுக்கு மேலான தமிழின விடுதலைக்கான யுத்தத்தில் இலங்கையரசு ஒரு வெற்றியையாவது பெற்றுக்கொண்ட வரலாறுகள் இல்லை. பாரிய தாக்குதல்களை எடுத்துக் கொண்டால் யாழ்ப்பாணம், பூநகரி, ஆனையிறவு, முல்லைத்தீவு, வெளி ஓயா, மாவிலாறு, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் இடம்பெற்ற சமர்களில் இதுவரையில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதன் பின்னர் விடுதலைப்புலிகளுடன் போரிட்டு வெல்ல முடியாது என உணர்ந்து கொண்ட இலங்கையரசு இடைக்கால நிர்வாகம் என்கிற தோரணையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை வரை ஆரம்பித்தது. இலங்கையில் வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகம் உருவாக்கப்பட்டால் அது இந்தியாவைப் பாதிக்கும் என்கிற வகையிலும், பூகோள ரீதியாக இருக்கக்கூடிய நாடுகள் பல்வேறான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும் என்கிற காரணத்தினாலும் விடுதலைப் புலிகளை இல்லாதொழிக்கவேண்டும் என்கிற நோக்குடன் இந்த ஈழப்போரின் இறுதிக்கட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ் இறுதிக்கட்ட யுத்தத்தில் வவுனியா கூட்டுப்படைத்தளம் தாக்குதல், அநுராதபுரத் தாக்குதல், கொழும்பு கட்டுநாயக்கா தாக்குதல் என்பன மிகவும் முக்கியம் வாய்ந்தவை. சர்வதேச ரீதியாக விடுதலைப்புலிகள் வளர்ச்சியடைந்திருந்த காலகட்டம். இவ்வாறு வளர்ச்சி பெற்றால் ஈழத்தை விடுதலைப்புலிகளுக்குக் கையளிக்க வேண்டிவரும். சர்வதேச ரீதியாக எந்தவொரு நாடுகளும் இலங்கைக்குள் தமது சுயவிருப்பின் படி வந்துபோக முடியாது. விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் கடல், வான், தரை மார்க்கங்களாக சர்வதேச கப்பல்கள், விமானங்கள் வந்து போவதற்கு விடுதலைப்புலிகள் பெரும் முட்டுக்கட்டையாக இருந்தார்கள். குறிப்பாக வடகிழக்கு கடற்பிராந்தியங்களில் விடுதலைப் புலிகளின் அனுமதியின்றி எந்தக் கப்பல்களும் வர முடியாது. இராணுவப் பாதுகாப்புடன் கப்பல்கள் வந்தாலும் விடுதலைப்புலிகள் அக்கப்பல்களை இலக்கு வைத்துத் தாக்கும் திறன் கொண்டிருந்தார்கள்.

விடுதலைப்புலிகளை போரினால் வெற்றிபெற முடியாது என்கிற தீர்மானத்துடன் சர்வதேச பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டது. இப் பேச்சுக்களினூடாக விடுதலைப்புலிகளை பலமிழக்கச் செய்வதே நோக்கமாக இருந்தது. விடுதலைப்புலிகளின் கட்டளைத் தளபதியாக அன்று மிகத் திறமையாக செயற்பட்டுவந்த கருணா அம்மான் அவர்களை விடுதலைப் புலிகளிடமிருந்து பிரித்து எடுப்பதன் ஊடாக விடுதலைப்புலிகளை தோற்கடித்து வெற்றி பெற முடியும் என அரசு நன்கு உணர்ந்துகொண்டது. அதனையே தொடர்ந்தும் கையாண்டு பேச்சுவார்த்தையினூடாக கருணாவைப் பிளவுபடுத்தியது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட இலங்கையரசு மீண்டும் விடுதலைப்புலிகள் மீதான யுத்தத்தை கட்டவிழ்த்திருந்தது. இதன் காரணமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் பின்னடைவைச் சந்தித்தது. இறுதியாக மாவிலாறில் ஆரம்பித்த போர் முள்ளிவாய்க்காலில் முடிவடைந்தது என்பது சுருக்கமான வரலாறு.

தற்போதைய பிரச்சினை என்னவெனில் முப்படைகளையும் ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு சிறுபான்மை யினரை அடக்கியாளலாம் என்று கனவு காண்கிறார். அதனொரு கட்டமாகவே முஸ்லீம் நீதியமைச்சர் ஒருவரை நியமித்து அவர் ஊடாக சில சட்டங்களை நிறைவேற்றி அவர்களது மத சம்பிரதாயங்களைக் கூட சரியாகச் செய்ய முடியாத அளவிற்கு இந்த நீதியமைச்சு செயற்படுகிறது. நீதியமைச்சராக செயற்படும் அலி சப்ரி அவர்கள் தனது இனம் படுகின்ற இன்னல்களுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றார். கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு இறந்து போகிறவர்களை புதைப்பது இல்லை எரிப்பது என்பதே இலங்கையின் நடைமுறையாக இருக்கிறது. இதன் அடிப்படையில் தான் முஸ்லீம்களின் ஜனாசாக்களும் எரிக்கப்படுகிறது. ஆனால் வெளிநாடுகளில் மத அனுஸ்டானங்களைக் கடைப்பிடித்து உரிய காரியங்களைச் செய்து இறந்த உடல்களைப் புதைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. உலக சுகாதார ஸ்தாபனமும் எரிப்பது அல்லது புதைப்பது உகந்தது என்கிறது. அண்மையில் 20 மாதக் குழந்தை கூட எரியூட்டப்பட்டிருக்கிறது. முஸ்லீம் மக்கள் அவர்களது ஜனாசாக்களை புதைப்பது வழக்கம். இப்படியிருக்க குறித்த இனத்தைச் சார்ந்த ஒருவர் நீதியமைச்சராக இருந்துகொண்டு முஸ்லீம் மக்களின் ஜனாசாக்களை புதைப்பதற்கு அவரால் உரிய அனுமதியினை பெற்றுக்கொடுக்க முடியவில்லை எனில் அந்த நீதியமைச்சு எதற்காக இந்நாட்டில் செயற்படவேண்டும். அவர் ஏன் இன்னமும் நீதியமைச்சராக இருக்கவேண்டும் என்கிற கேள்வியும் முஸ்லீம் மக்கள் மத்தியில் எழாமலில்லை. முஸ்லீம் மக்கள் இறைவனுக்காக தமது இன்னுயிரைக் கொடுப்பதற்கும் தயாராக இருப்பவர்கள். இந்த விடயத்திலும் நீதி மறுக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பிள்ளைகளுக்கு அவர்களது பெற்றோர் அஞ்சலி செலுத்தக்கூடாது என உயர்



நீதிமன்றம் தடை விதித்தது. இதுவும் ஒரு இனச்சுத்திகரிப்புக்கான வேலைத்திட்டமே. இலங்கை அரசுக்கு வேண்டுமெனில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து இறந்தவர்கள் பயங்கரவாதிகளாக இருக்கலாம். ஆனால் பெற்ற தாய் தந்தையர்களுக்கு அவர்கள் பிள்ளைகள். கெட்டவன் நல்லவன் என தாய் தந்தையருக்கு கிடையாது. எல்லோரும் பிள்ளைகளே. ஆகவே அவர்களின் நினைவஞ்சலியை செலுத்தக்கூடாது என அரசு கட்டளையிட்ட விடயம் மனித உரிமையை மீறுகின்ற ஒரு செயற்பாடு. இந்நிலை தொடருமாகவிருந்தால் இலங்கையின் சிறுபான்மை இனங்கள் மாற்றுவழி பற்றி சிந்திக்க வேண்டியேற்படும். ஆகவே இலங்கையரசு நீதி நிர்வாகங்களை சரியாகச் செயற்படுத்தவேண்டும். இந்நாட்டில் சிங்களவர்களுக்கு ஒரு நீதி, தமிழ் - முஸ்லீம்களுக்கு வேறொரு நீதி அல்ல. எல்லோரும் இந்நாட்டு மக்கள் எனப் பார்க்கப்படவேண்டுமாகவிருந்தால் ஜனாதிபதியும் பிரதமரும் நீதியைக் கையில் எடுக்கக்கூடாது. அதனை சட்டத்திடம் விட்டுவிடவேண்டும். அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்துவதனால் இந்த சட்டங்கள் மீறப்படுகின்றன. அந்த சட்டம் ஒரு இனத்துக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது.

இதற்கான நீதியை வெகுவிரைவில் இந்த அரசாங்கம் வழங்கவேண்டும். முள்ளிவாய்க்காலில் புதைந்துபோன ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்திற்கு மேற்பட்டோருக்கு இவர்கள் பதில் கூறவேண்டும். இலங்கையில் இருக்கக்கூடிய குற்றப்புலனாய்வுப் பிரிவுகளில் கணிசமான முஸ்லீம்களும் அங்கம் வகிக்கிறார்கள். இவர்கள் இந்த நாட்டிற்காக தமிழினத்தைக் காட்டிக்கொடுத்து அரசுகள் வாழ வழிவகுத்தவர்கள். இன்று இவர்களது நிலையும் துர்ப்பாக்கியமானதாக மாற்றப்பட்டிருக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகளை முஸ்லீம் சமுதாயம் எதிர்நோக்க வேண்டியிருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டதை அடுத்து ஒன்று சேர்ந்த முஸ்லீம் ஆீக்கள் அதன் பின்னர் அரசியலமைப்பின் 19ம் திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த ஜனநாயகத்தை தாரைவார்க்கும் 20 ஆம் திருத்தத்தை கொண்டுவர ஒன்று சேர்ந்தார்கள்.

முஸ்லிம்களின் உரிமையை ஏற்றுக்கொள்ள தயங்கும் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதன் ஊடாக இவர்கள் எதிர்பார்ப்பது என்ன? மக்களுக்கு சேவை செய்வதற்கு என்று வைத்துக்கொண்டாலும் உரிமைக்கான குரலையும் விட பௌதீக அபிவிருத்தி மேலானதா? Pocket money, commision இவைதான் உங்கள் எண்ணம் என்றால் அதை செய்து கொள்ளுங்கள். தயவு செய்து மேடைகளில் முஸ்லிம்களின் உரிமைகளை காக்கத் துடிக்கும் போராளிகளாக காண்பிக்க முயற்சிக்க வேண்டாம்.

மையத்தை எரிக்கிறார்கள் என்று மேடைகளில் மக்களை உசுப்பேற்றி வாக்குகளை சுரண்டிய நீங்கள் இன்று மையத்தை எரிக்க துடிக்கும் தரப்புக்கு தீப்பந்தத்தை வழங்குவதற்கு ஒப்பான ஒரு காரியத்தை செய்துவிட்டு மௌனியாகிவிட்டீர்கள். பச்சிளம் பாலகனையும் விட்டு வைக்காமல் எரிக்க துடிக்கும் கூட்டத்தை பார்த்து கேள்வி கேட்க முடியாத அளவுக்கு நீங்கள் கோழையாகி விட்டீர்கள். மக்களின் ஆணையை மதிக்கத் தெரியாத உங்களிடம் என்ன நியாயத்தை எதிர்பார்ப்பது? இப்போது நீங்கள் இப்படியான தர்மசங்கடத்துக்கு தள்ளப்பட காரணம் உங்கள் தொலைநோக்கற்ற தீர்மானமும், சுயநல சித்தாந்தமும் தான். இதற்கான விலையை ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் ஏற்க வேண்டுமா? உங்கள் அரசியல் இருப்பை தக்க வைப்பதற்காக, அல்லது பலப்படுத்துவதற்காக முஸ்லிம்களின் உரிமைகளை அடகு வைக்க துடிக்கும் உங்களை சமூகக் காவலர்களாக காட்ட முயற்சிக்காதீர்கள்.

பேரம் பேசும் சக்தியாக இருந்த முஸ்லிம்களின் வாக்குப் பலத்தை அர்த்தமற்றதாய் ஆக்கிய நீங்கள், யாரிடம் கேட்டு இந்த தீர்மானத்துக்கு வந்தீர்கள். வாக்கு கேட்கும் போது மக்களின் ஆணையை கோரும் நீங்கள் இப்போதைய நெருக்கடியில் மக்களின் தீர்ப்புக்கு அப்பால் சென்று முடிவெடுக்கும் அளவுக்கு உங்களில் செல்வாக்கு செலுத்திய விடயம் என்ன? எதையும் பொருட்படுத்த வேண்டாம். அடுத்த முறை மேடைகளில் எறி உரிமைகளை வென்றெடுக்க முஸ்லிகளின் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று உரத்துப் பேசுங்கள். முஸ்லிம் பிரதேசங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்குங்கள். உங்களுக்காக சமூக ஊடகங்களில் எழுத, பிரச்சாரம் செய்ய ஒரு கூட்டத்தை வாடகைக்கு அமர்த்துங்கள். சமூகத்தில் முக்கிய புள்ளிகளை பணம் கொடுத்தேனும் உங்கள் பக்கம் ஈர்த்துக் கொள்ளுங்கள். பிரதேசவாதத்தை தூண்டுங்கள். இனவாதத்தை தூண்டுங்கள். இவற்றை எல்லாம் நம்பி, ஏற்றுக்கொண்டு உங்களுக்காய் குரல் கொடுத்து வாக்குகளை அள்ளி வழங்க இந்த அப்பாவி வாக்காளர்கள் தயாராக இருக்கிறோம். நாங்களும் உங்களைப் போல் சூடு சொரணை இல்லாதவர்கள் தான். கால ஓட்டத்தில் இதை எல்லாம் மறந்து உங்களை மக்கள் தலைவா என்று கை கூப்பி வரவேற்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.

உங்கள் அரசியலுக்காய் எதையும் தாங்கிக் கொள்ள இந்த சமூகம் தயார். நீங்கள் வந்து எங்களோடு ஒரு எநடகை எடுத்துக் கொண்டால் போதும். கொரோனா வைரஸ் தொற்றி நான் மரணித்தால், என்னை எரிப்பார்கள். என் உருவம் மிஞ்சாது. நான் யார் என்பதை அடையாளம் காண என் சமூகக் காவலர்களுக்கு முடியாமல் போகும். அந்த நேரத்தில் நான் எடுத்துக் கொண்ட எநடகை யை அவர்களிடம் காட்டுங்கள். அதையும் வைத்து அவர்கள் அரசியல் செய்யட்டும். நிலைமைகள் இவ்வாறு தொடருமாகவிருந்தால் சிறுபான்மைச் சமூகம் சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிராக கிளர்ந்தெழுகின்ற சூழல்கள் உருவாக்கப்படும். ஆகவே இலங்கையின் நீதிக்கட்டமைப்பு ஒன்று இருப்பதாகவிருந்தால் அது சுயாதீனமாக இயங்குவதாக அமையவேண்டும். இல்லையேல் இவ்வாறானதொரு நீதியமைச்சு இலங்கைக்குத் தேவையில்லை என்பதையே நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனாவும், தடுமாறும் அரசுகளும்

உலக அளவில் கொரோனா பரவல் மிக வேகமாக அதிகரித்தவண்ணம் உள்ளதை புள்ளிவிபரங்கள் காட்டி நிற்கின்றது. அந்த வகையில் 69,808,588 பேர் இதுவரை யான காலப்பகுதியில் இவ் வைரசால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும். 1,588,854 பேர் இதுவரை மரணித்திருப்பதாகவும் உலக சுகாதார நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. எனினும் அமெரிக்காவில் நாளுக்கு நாள் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகூடுதலாக இருப்பதையும் அடுத்த இடத்தில் ஐரோப்பிய நாடுகள் இத் தொற்றுக்கு இலக்காகி அரசுகள் தடுமாறி வருவதைக் காணமுடிகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை முதலாம் அலை எதிர்பார்த்ததைப் போல வீரியமற்றதாக இருந்தாலும் இரண்டாம் அலை அல்லது சிலர் இது மூன்றாம் அலை என்கின்றனர். எது எவ்வாறாக இருப்பினும் தற்போது தான் இலங்கையில் கொரோனா வைரசின் தாக்கம் இலங்கையில் வெகு வாக உணரப்படுகிறது. நாளுக்கு நாள் தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையில் உயர்வைக் காணக்கூடியதாக இருக்கிறது. புதிதாக ஆட்சிக்கு வந்த கோட்டபாய தலைமை யிலான அரசு பல விடயங்களை செய்யப்போகின்றோம் எனவும், பல கனவுகளுடன் அரியணை ஏறியபோதும் இக் கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக செய்வதறியாது நிலை தடுமாறி வருவதை நன்கு உணரமுடிகி றது. இவ் தொற்றைக் கையாள்வதில் ஆரம்பத்தில் பாராட்டு வாங்கிய இவ் அரச தரப்பினர் இரண்டாம் அல்லது மூன்றாம் அலையின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தற்போது மௌனி களாக மாறிப்போயிருக்கின்றனர். இனி எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்கிற ரீதியில் அரசின் போக்கிலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகி றது.

உலக வல்லரசு நாடுகளே இவ் வைரஸ் தாக்கத்தின் காரணமாக தடுமாறி வரும் சூழ்நிலையில், இலங்கை மாத்திரம் என்ன விதிவிலக்கா? என்கிற கேள்விக்கு தற்போது விடையும் கிடைத்திருக்கிறது. இலங்கையில் கொரோனாக் கொத்தனிகள் உருவாக்கம் பெற்றிருக்கின்றன. இன்னும் சில கொத்தனிகள் உருவாக வாய்ப்பும் இருப்பதாகக் கூறப்படுகிறது. கொழும்பு அபாய வலயமாக மாறியிருக்கிறது. இது சமூகத் தொற்றாக மாறியிருக்கிறது என்பது ஒரு சில ஆய்வாளர்களின் கருத்தாகவும் உள்ளது. ஆங்காங்கே தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டே வருகின்றனர்.

உலகின் பொருளாதாரமே சரிவடைந்து போயிருக்கிறது. மக்கள் வேலை வாய்ப்பினை இழந்து நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர். அரசுகள் செய்வதறியாது நிலைகுலைந்து போயுள்ளன. நாடுகளுக்கிடையிலான விமான - கப்பற் போக்குவரத்துக்கள், ஏற்றுமதிகள் - இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து நாடுகளும் விரைவாக தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் இறங்கியிருப்பதுடன், ஒரு சில உலக நாடுகள் தடுப்பு மருந்தினைக் கண்டுபிடித்து விட்டதாகவும், இவ் தடுப்பு மருந்து முதன் முதலாக வயதான ஒருவருக்கு வழங்கப்பட்டு விட்டது என்கிற செய்திகள் அண்மையில் வெளிவந்துள்ளது. இந்நிலையில் இலங்கை அரசும் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது. ஒரு பக்கம் கொரோனா மறுபக்கம் அபிவிருத்தி களுக்குத் தடை, நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, உற்பத்திகள் பாதிப்பு, இறக்குமதித் தடை என அல்லல்பட வேண்டியுள்ளது. உலகத்தையே தன் பிடிக்குள் சிக்க வைத்துள்ள இவ் வைரஸிடமிருந்து விடுதலை எப்போது?

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

128



சரியான இலக்குப்பொருத்தல் புள்ளியைத் திரையில் விழுத்துவதற்காகப் புதிய வீரனை, இலக்குடன் சுடுகலன் குறிவைத்தவாறிருக்கின்ற இலக்குப்பொருத்தல் புள்ளியை நோக்கி வரவழைக்க வேண்டும். இதன்போது சுடுகலன் அசையாதவாறு இருக்கின்றதுடன் இலக்கு மாத்திரமே அசைக்கப்படுகின்றது. குறிபொருத்தல் மூன்று தடவைகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு தடவையும் இலக்கினூடாகத் துளை போடப்படுகின்றது. மூன்று குறிபொருத்தல்களின் பின்னர் திரையில் புள்ளிகள் சரியாகப் பொருந்தியிருந்தால் பெறுபேறுகள் சிறந்ததாகக் கணிக்கப்படுகின்றது. சாத்தியம் கிடைக்கின்றபோது, கூடுதலாகப் பயன்படுத்தப்படும் 0.22 அங்குலக்குழல்விட்டமுடைய சுடு கலனைப் பயன்படுத்திச் செயன்முறைச் சூட்டுப்பயிற்சியை ஆரம்பிக்கவேண்டும்.

மிக முக்கியமான சமயங்களில் (சேமிப்பில் வெடிபொருட்கள் இருக்கின்ற போது அல்லது மிக அவசியமாக புதிய போராளிகள் சிலரைத் தயார்ப்படுத்த வேண்டிய சூழ்நிலையில்) சுரி சுடுகலனால் உண்மையான ரவைகளைப் பயன்படுத்திச் சூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்படுகின்றது. புதிய போராளிகளின் பயிற்சிக்கூடங்களில் மிக முக்கியமான பாடங்களில் ஒன்றாகப் பிரதேசத்தை வான்தாக்குதலிலிருந்து காத்தல் விளங்குகின்றது. நாங்கள் இப்பாடத்தைப் பிரதானமானதாகக் கருதுகின்றோம்.

ஒரு தடவை எமது பயிற்சிக்கூடம் வானிலிருந்து அவதானிக்கப்பட்டு இனங்காணப்பட்டுவிட்டது. இதன்பின் ஒரு நாளைக்கு ஒன்றிரண்டு தடவையென ஒவ்வொருநாளும்விமானத்தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது. இந்தத்தொடர்ச்சியான விமானத் தாக்குதல் காலங்களில் புதிய போராளிகளின் நடத்தை எதிர்காலச் சமர்களில் இவ்விளைஞர்கள் தலைசிறந்த போர்வீரர்களாகத் திகழ்வார்கள் எனும் திறனைக் கணிக்க உதவியது.

10. கெரில்லா ,ராணுவத்தின் கட்டமைப்பு நாங்கள் முன்னரேயே பார்த்ததைப்போல, கெரில்லா வகை இராணுவத்தின் (அது செயற்படுகின்ற வலயத்தைப் பொறுத்தன்றி) கட்டமைப்பில் உள்ளூர் நிர்வாக அமைப்பு என அழைக்கப்படும் உறுப்பொன்றும் உள்ளடக்கப்படுகின்றது. இந்த அமைப்பு சமர் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்குபற்றாவிடினும் கெரில்லா இராணுவத்திற்குப் பெரிய உதவிகளைச் செய்கின்றது. இந்த அமைப்பின் சகல செயற்பாடுகளும் கெரில்லா இராணுவத்துடன் நெருக்கமாகத் தொடர்புபட்டவையாகும். குறிப்பாக, வெற்றியை எட்டுவதற்குரிய தீர்க்கமான காரணியாகக் கெரில்லா இராணுவத்தின் ஆயுதப் போராட்டம் விளங்குவதால் இந்த அமைப்பு சகலவிதத்திலும் இராணுவத்திற்கு ஆதரவளிக்கின்றது.

கட்டளையாளனுக்குக் கீழ்ப்படிதல் எனும் கோட்பாட்டிற்கமைய சமரொழுங்கமைப்புக் கட்டிய மைக்கப்படுகின்றது. ஆனால் கியூபாவைப் பொறுத்தவரையில் - பிரதான கட்டளையாளன் தலைமைவகிப்பார். இவர் முறைப்படி பிரதேசங்களதும் வலயங்களதும் கட்டளையாளர்களை நியமிக்கின்றார். இக்கட்டளையாளர்கள் தமக்குரிய பிரதேசங்களில் தமது அதிகாரங்களை வெளிப்படுத்திச் செயற்படுகின்றதுடன் கெரில்லாக் குழுக்களுக்கான கட்டளையாளர்கள் கீழ்நிலைக் கட்டளையாளர்கள் போன்றோரையும் நியமிக்கின்றனர்.

பிரதான கட்டளையாளனுக்குக் கீழ் சமர் வலயக் கட்டளையாளர்கள் இருக்கின்றனர். இவர்களுக்குக் கீழ் கெரில்லாக் குழுக்களின் கட்டளையாளர்கள் இருக்கின்றார்கள். அத்துடன் முறைப்படி கெரில்லாப் படைப்பிரிவின் கட்டளையாளர்களும் இருப்பார்கள். படைப்பிரிவின் ஆளணி எண்ணிக்கைசூழ்நிலைகளைப்பொறுத்து மாறுபடும். மேஜர் தர அதிகாரிக்கு அடுத்துக் (குழுக் கட்டளையாளன்) கப்டன் தர அதிகாரி இருப்பார். எமது கெரில்லா விதிக்கமைய அவரைத் தொடர்ந்து குறைந்த தர அதிகாரியான லெப்டினனட் இருப்பார். லேப்டினன்டிற்குக் கீழ் படைவீரன் இருப்பான். இது அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய திட்டமன்றி எப்படி நாங்கள் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஆயுதந்தரித்த இராணுவத்திற்கு எதிராக வெற்றியை எட்டுவதற்கு உதவியதைப்பற்றிய ஒரு அறிக்கை மாத்திரமே ஆகும்.

இது ஏதாவதொரு போதித்தல் என்று அர்த்தம் கொள்ளும் விடயமல்ல. நாங்கள் சாதாரணமாக எப்படிச் சம்பவங்கள் யாவும் நடைபெற்றன எவ்வாறு ஆயுதப்படை ஒழுங்கமைக்கப்பட்டிருக்கலாம் என்பனபற்றி தெரியப்படுத்தவே விரும்புகின்றோம். முடிவில் இராணுவத் தரங்கள் பாரிய முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கவில்லை. அவசியம் நினைவில் கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் இராணுவத் தரம் ஒருவனது நடத்தைக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும். பொதுவான ஒழுக்க நியாயக் கோட்பாடுகளுக்கு எந்தவிதத்திலும் பொருத்தமற்ற பழக்கத்தைக் கொண்டவனுக்கும் தன்னை அர்ப்பணித்துச் சமருக்கோ போராட்டத்திற்கோ செல்லமாட்டாதவனுக்கும் இவ்வாறான இராணுவத்தரத்தை வழங்கக்கூடாது. நுாங்கள் மேலே கூறிய திட்டம் உண்மையான சமர் நடவடிக்கையை மேற்கொள்ளும் திறன் கொண்ட இராணுவத்திற்கே பொருத்தமானதாகும். இப்போது மாத்திரம் உருவாக்கப்பட்டுள்ள கெரில்லாப் படைப்பிரிவிற்குப் பொருத்தமற்றதாகும். ஏனெனில் இங்கே சிறிதளவு ஆட்களைக் கொண்ட குழுவொன்றைக் கொண்டவனாகவே கட்டளையாளன் இருப்பான். அவனோ தனக்கென விரும்பிய இராணுவத் தகுதி நிலையைத் தெரிவுசெய்வான்.

இப்பொழுது மிக முக்கியமான சமரொழுங்குபடுத்தல் விடயத்தில் ஒன்றான ஒழுக்கத் தண்டனை நடவடிக்கை பற்றி ஆராய்வோம். மீண்டும் ஒர தடைவ குறிப்பிடுகின்றோம். ஒழுக்கம் - இது கெரில்லாப் படைப்பிரிவின் செயற்பாட்டு அடிப்படைகளின் அடிப்படையாகும். ஒழுக்கம் அறிவில் இருக்க வேண்டும். உள்மனச் செயற்பாட்டிலிருந்து வெளிப்பட வேண்டும். குறிப்பாக உள்மனச் செயற்பாட்டிலும் அறிவிலுமே தன்னிகரற்ற புரட்சியாளனின் உயர் ஒழுக்கம் குடியிருக்கின்றது. ஒழுக்கம் மீறப்படும் சமயங்களில் குற்றமிழைத்தவனின் பணிநிலையைப் பொருட்படுத்தாது அவனைத்தண்டிக்க வேண்டும்.

குற்றமிழைத்தவன் உணரும் வண்ணம் மிகக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். இவை யாவும் மிக முக்கியமாகும். ஏனெனில் கெரில்லாமீதும் வழக்கமான இராணுவச் சிப்பாய் மீதும் தண்டனை வெவ்வேறான வினைவுகளைத் தருகின்றது. எடுத்துக்காட்டாக கெரில்லாச் சூழலில் பத்து நாட்கள் காவற்கூடத்தில் அடைப்பு - இது மிக உயர்ந்த ஓர் ஓய்வு மாத்திரமே ஆகும். ஏனினில் பிற நேரத்தில் இதனை (ஓய்வை) மேற்கொள்ளக் கெரில்லாக்கள் அனுமதிப்பதில்லை. காவற்கூடத்தில் கெரில்லா ஒன்றும் செய்யப்போவதில்லை. வேலை செய்யமாட்டான், மாறாகச் சாப்பிடுவான், நித்திரை கொள்வான், வாசிப்பான் இவ்வாறானவற்றையே செய்வான். ஆடைத்தல் இழக்கின்றதென்பது தெரிவின்றது. ஆகவே தான் இதனைப் பயன்படுத்தப் பரிந்துரைப்பதில்லை.

இவ்வாறான சமயங்களில் கெரில்லாவை ஆயுதம் வைத்திருக்கத் தடைவிதித்தல் வேண்டிய பலனைத் தரலாம். ஆத்துடன் அவனைப் பொறுத்தவரையில் உண்மையான தண்டனையாகவும் விளங்கலாம். உயர் அறிநெறி, சமர்ப்பண்பு, பெரியளவில் தன்மானம் போன்றவற்றைக் கொண்ட ஆட்களுக்கு இவ்வாறான தண்டனை உண்மையான தண்டனையாக இருக்கும். அவர்களுக்கு இவ்வாறான தண்டனை மிகப் பொருத்தமே! ஏனக்குக் கீழிருந்த கெரில்லாக்களைப் பற்றிச் சொல்வதானால் நான் அவர்கள் மீது பின்வரும் தண்டனை நடவடிக்கைகளை எடுத்தேன்.

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**

# வடகிழக்கு அரசியல் பற்றி தெரியாதவர்கள் பாராளுமன்றத்தில் கொக்கரிக்கின்றார்கள்

இன்றைய சமகால அரசியல் பார்வையில் மிக முக்கியமாக கொரோனா வைரசினுடைய தாக்கம் மற்றும் முஸ்லீம்களின் ஜனாசாக்களை எரிக்கின்ற விவகாரம், பூகோள அரசியல், வடக்கு கிழக்கிலே சிங்கள இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு, கட்சிகளுக்கிடையிலே பிளவுகளை ஏற்படுத்துதல் போன்ற விடயங்கள் குறித்து நாம் கவனம் செலுத்தவிருக்கிறோம். இலங்கையின் அரசியல் நகர்வுகளை எடுத்துக்கொண்டால் சிறுபான்மை இனத்தின் மீது குரோத மனப்பான்மையுடன் அவர்களைப் பழிவாங்கும் விதமாக அடக்கியாளுகின்ற வகையில் அரசினது நடவடிக்கைகள் அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. கடந்த காலங்களில் முஸ்லீம்களை அரவணைத்து வைத்திருந்த இலங்கையரசு தற்போது அவர்களை ஓரங்கட்டுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

தற்போது கொரோனா வைரஸ் காரணமாக இறந்துபோகிறவர்களின் உடல்களை அதாவது முஸ்லீம் மக்களது ஜனாசாக்களை எரிக்கின்ற விடயம் தொடர்பாக, இவ் விடயம் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கிறது. வேடிக்கைக்குரிய விடயம் என்னவெனில் முஸ்லீம் அரசியல் கட்சிகளின் ஒருசிலர் அரசின் வரவுசெலவுத்திட்டத்திற்கு வாக்களித்திருக்கிறார்கள். வாக்களிப்பதன் மூலமாக ஏதாவது முஸ்லீம் மக்களுக்கு எதிர்வரும் காலங்களில் நன்மை கிட்டுமாக இருந்தால், அவர்கள் இந்நாட்டில் கடந்த காலங்களில் எதிர்கொண்ட அல்லது தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் உடனடியாக வழங்கப்படுமாக இருந்தால் வாக்களிப்பதில் தவறில்லை. ஆனால் இது எதுவும் நடைபெறாது என நன்கு தெரிந்தும் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தில் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நீதியமைச்சராக இருக்கக்கூடிய அலி சப்ரி அவர்களால் கூட ஒன்றுமே செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விடுத லைப் புலிகள் மௌனிக்கப்பட்டதன் எதிரொலி தான் அரசின் எதேச்சாதிகார சம்பவங்கள் துணிச்சலாக நடைபெறுவதற்குக் காரணம் என்று பலர் கூறாமலுமில்லை.

சிறுபான்மை இனங்களுக்குத் தீர்வு வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அவர்களை சர்வதேச ரீதியாக பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோதும் அவர் அங்கும் குழப்பம் விளைவித்தார். அரசுடன் இணைந்து தொடர்ந்தும் பயணித்தனர் முஸ்லீம் அரசியல்வாதிகள். இன்று உணர்ச்சி ஆவேசத்துடன் பேசுவதற்கு பயிற்சி பெறும் இடமாக மாத்திரம் பலருக்கும் இலங்கையின் பாராளுமன்றம் மாறிப்போயிருக்கிறது. ஆனால் அவர்களின் செயற்பாடுகள் வெறும் பூச்சியமாகத்தான் இருக்கிறது. கோழி கொக்கரிப்பதைப் போல பாராளுமன்றில் கொக்கரித்துவிட்டு இருக்கின்ற பிரச்சினைக்கு மேலும் எண்ணெயை ஊற்றி பற்றவைக்கும் வேலையை சரிவரச் செய்ய அன்றும் இன்றும் பலர் இல்லாமலில்லை. இறுதியில் உயிரிழந்த உறவுகளுக்கான அஞ்சலிகளை இனிமேலும் செய்ய அரசு அனுமதிக்காத வகையில் உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளை அள்ளிவீசும் வேலையை கச்சிதமாக செய்து முடித்துள்ளனர். பேசியவர்களால் எதனைச் சாதிக்க முடிந்தது. விடுதலைப்புலிகள் தான் தாயகத்துக்காக உயிர் நீத்த உறவுகளுக்காக, மாவீரர்களுக்கான அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்வுகளைச் செய்துகொண்டிருக்க, ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப், தமிழரசுக் கட்சியினர் இன்று நிச்சயமாக அஞ்சலி செய்யவேண்டும் என்கின்றனர். இது விடுதலைப்புலிகளால் பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்ட ஒன்று.

தமிழ் மக்கள் நலன் கருதி ஒரு விடயத்தை செய்யப்போகின்றோம் என்றால் அதனை மறைமுகமாக நகர்வுகளை செயற்படுத்திக்கொண்டு போவதன் ஊடாக எமக்கான தீர்வு நோக்கிப் பயணிக்கலாமே தவிர, உணர்ச்சி வசப்பட்டு மாத்திரம் பேசிவிட்டு வருவதால் இவ் அரசியலில் எதுவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. டட்லி சேனாநாயக்கா தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரை தமிழ் மக்களுக்கு தீர்வுகள் வழங்கப்படக்கூடாது என்று செயற்பட்டார்கள் தொடர்ந்தும் செயற்படுகின்றார்களே தவிர, அவர்கள் தமிழ் மக்கள் மீது அன்பாக கைகோர்த்தவர்கள் அல்ல. அரசுகளைப் பொறுத்தவரை மக்களுக்குத் தேவையானவற்றை வழங்குவது, அபிவிருத்தி, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களை அவர்கள் செய்ய வேண்டும். ஆனால் எமது உரிமைப் போராட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ள எமது புல்லுருவிகள் பலர் அரசுடன் இணைந்துள்ளதால் எதனையும் செய்ய முடியாதுள்ளது. அன்று ஈழக்கோரிக்கையினை முன்வைத்தே போராட ஆரம்பித்தீர்கள். தற்போது விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் இல்லை. இன்று ஆயுதப்போராட்டம் ஒருபக்கம் வைத்துவிட்டு, அரசியல் ரீதியான தீர்வுகளைக் கூட தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க உங்களால் முடியவில்லை எனில் எதற்காக வெறும் பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரித்துக்கொண்டு அங்கு வீற்றிருப்பதில் என்ன பயன் இருக்கிறது.


ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாக கொலை செய்யப்பட்டபோது கிழக்கிலே, தெற்கிலே பாற்சோறு பொங்கி கொண்டாடி மகிழ்ந்தவர்களை நாம் இன்றும் மறக்கவில்லை. சிங்களவர்கள் எப்போதும் சிங்களவர்களாகவே இருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கான தீர்வுகளை உரிமைகளை வழங்கக்கூடாது என்பதில் அவர்கள் தெளிவாக உறுதியாக இருக்கிறார்கள். அரசியல் ரீதியான நகர்வுகளை இலங்கையின் புலனாய்வுப் பிரிவினருக்கு தெரியப்படுத்திவிட்டு எவ்வாறு நீங்கள் உங்களது நடவடிக்கைகளைச் செய்யப்போகின்றீர்கள். ஒரு திருடன் வீட்டிற்குத் திருட வருகின்றான் எனில் அவன் சொல்லிவிட்டு வந்தால் திருட முடியாது. அதுபோன்று எமது அரசியல் ரீதியான நடவடிக்கைகள் சரியாக செய்யப்படுகின்ற போது தான் அதற்குரிய தீர்வு கிட்டும்.

மாறி மாறி வருகின்ற அரசுகளுக்கு துணைபோனால் சிறுபான்மை இனங்களுக்கு ஆபத்து தான் அதிகரிக்கும். மறைந்த முஸ்லீம் காங்கிரசின் தலைவர் கௌரவ அஷ்ரப் அவர்களைப்போல முஸ்லீம்தலைவர்கள் உருவாகவேண்டும். பாராளுமன்றஉறுப்பினர்றிசாட் அவர்கள்மீதுபல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி சிறையில் அடைத்தார்கள். ஆனால் அப்போது அரசிற்குத் தேவைப்பட்ட பல முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று கருவேப்பிலையாக மாறிப்போயுள்ளனர். கடந்த காலங்களில் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட்ட கிழக்கின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் உள்வாங்கப்பட்டார். இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான வியாழேந்திரன் அவர்கள் அரசினால் உள்வாங்கப்பட்டுள்ளார். கிழக்கில் இடம்பெற்ற தமிழ் மக்கள் மீதான படுகொலைகள், தமிழர் பிரதேசங்கள் மாற்றம் பெற்றிருக்கின்றது. ஆலயங்கள் உடைக்கப்பட்டு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டது. சொத்துக்கள் அழிக்கப்பட்டது என்பதெல்லாம் அனைவருக்கும் தெரியும். கிழக்கின் அரசியல் பற்றி முழுமையாக அறியாதவர்கள் இன்று பாராளுமன்றத்தில் உணர்ச்சி வசப்பட்டு உரைகள் நிகழ்த்துவதைக் காண்கின்றோம். அன்று தமிழ் ஊடகவியலாளர்களின் பங்கு என்பது தமிழர்களின் அரசியலில் அளப்பரியதாக இருந்தது. இன்று பல தமிழ் அரசியல்வாதிகள் அரசின் நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். அரசுடன் கைகோர்த்துக்கொண்டு தமிழ் மக்களுக்கானத் தீர்வினைப் பெற்றுக்கொள்ள இவர்களால் நிச்சயமாக முடியாது. வட கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் நோக்கி எமது அரசியல் செயற்பாடுகள் நகர்த்தப்படுவது தான் எமது எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமானதாக அமையும் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

– மறவன்



# கொரோனா வைரஸ் தாக்கமும், தமிழ் அரசியல் கைதிகளின் நிலையும்



இலங்கையில் சுயநிர்ணய உரிமை கோரி 1970களின் தொடக்கம் முதல் தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இப் போராட்டத்தை 5 தமிழ் இயக்கங்கள் ஒரே கொள்கை அடிப்படையில் இலங்கை அரசுக்கெதிராக போராடத் தொடங்கினர். இவ் ஆயுதப்போராட்டத்தை முளையிலேயே கிள்ளி ஏறிய அரசு தனது காவல்துறையை வைத்தும் தனது இராணுவத்தை வைத்தும் மிக கொடூரமாக அடக்க முயன்றது. இன விடுதலைக்காக போராட புறப்பட்ட ஆயுத அமைப்புக்களில் தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழ் ஈழவிடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்), ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) போன்ற அமைப்புகள் போராடப் புறப்பட்டன. இதில் ஆரம்பகால ரெலோ அமைப்பின் தலைவர் மற்றும் தளபதி ஆகியோர் வங்கி கொள்ளை சம்பவம் தொடர்பாக தேடப்பட்ட நிலையில் 1982 ஆம் ஆண்டு கைது செய்யப்படுகின்றார்கள்.

இதில் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்ற தலைவர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் 1983 ஆம் ஆண்டு யூலை 23 ஆம் திகதி புகழ் பூத்த திருநெல்வேலி தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட இலங்கை தமிழ் மக்களால் என்றுமே மறக்க முடியாத கறுப்பு ஜூலை உருவாகி கொழும்பு உட்பட பல பகுதிகளில் சிங்கள காடையர்களால் கலவரம் உருவாகி தமிழர்கள் பலர் கொல்லப்பட்ட அவல நிலை நடந்தேறியது.

இந்நிலையில் வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டிருந்த 53 அரசியல் கைதிகள் வெலிக்கடை சிறையில் வைத்து படு கொலை செய்யப்பட்டனர். அன்றிலிருந்து தொடங்கிய இந்த அரசியல் கைதிகள் படு கொலைகள் ஒவ்வொரு ஆட்சியாளர் பதவியில் இருக்கும் பொழுதும் இடம்பெற்ற வண்ணமே உள்ளது. 1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் பதவியேற்றத்தை தொடர்ந்து இன விடுதலைக்காக போராடிய ஆயுத அமைப்புகள் அனைத்தையும் தடைசெய்ததுடன் பயங்கரவாத தடைச்சட்டம் என்னும் ஆயுதத்தை கையிலெடுத்த சிங்கள பேரினவாத கொள்கையுடைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்கள் பயங்கரவாததடைச்சட்டம்மூலம்பலஅப்பாவி தமிழ் இளைஞர்களை கைது செய்ததுடன் இச்சட்டம் மூலம் பலரை காணாமல் ஆக்கியும் இச்சட்டத்தை பயன்படுத்தி அக்கால கட்டங்களில் கண்டபடி சுட்டுத்தள்ளுவதற்கு இராணுவத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டு இருந்தது. 1970களில் எமது இனத்தின் விடிவுக்காக போராட தொடங்கிய ஐந்து ஆயுதப்போராட்ட அமைப்புக்களில் கொள்கை விலகி தமது இலட்சிய பயணத்தின் பாதையை மாற்றி யாருக்கெதிராக போராட புறப்பட்டவர்களோ அவர்களின் கால்களில் சரணாகதி அடைந்தனர்.

இன்றும் சில போராட்ட இயக்கங்கள் எமது போராட்டத்திற்கு உறுதுணையாக இருக்கும் என நம்பிய இந்தியா அரசு தனது பிராந்திய சுயநலனுக்காக எமது போராட்ட அமைப்புகளை பயன்படுத்துகின்றது எனத் தெரிந்தும் அவர்களது எடுபிடிகளாக மாறிய சோகமான விடயம் நடந்தேறியது. இதில் தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டும் தனித்து நின்று அரசுக்கெதிராக போராடியது. தமது தலைவர் தளபதிகளை சிறையில் வைத்து படுகொலை செய்தது. அதில் குறிப்பாக குட்டிமணி அவர்களின் கண்ணை தோண்டி காலில் போட்டு மிதித்த சிங்கள இனவெறியர்களோடு சேர்ந்து தமிழ் இனத்துக்கு துரோகமிழைக்க தொடங்கியது. ரெலோ அமைப்பு இவ்வாறு பயங்கரவாத தடைச்சட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளை தவிர ஏனைய இயக்கங்களுக்கு இச்சட்டம் பாயவில்லை. ஏனெனில் அவர்கள் அரசின் கைக்கூலியாக செயற்பட்டமைக்கு பரிசாக இப்பயங்கரவாத தடைச்சட்டமானது அவர்களை பாதிக்கவில்லை.

இப்பயங்கரவாத தடைச்சட்டம் காரணமாக விடுதலைப்புலிகள் சந்தேக நபர்கள் மற்றும் ஆதரவாளர்கள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களின் உறவினர் என்ற எல்லோரும் கைது செய்யப்பட்டனர். அத்துடன் இதில் எதுவித தொடர்புமற்ற அப்பாவி தமிழ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். தமிழர்களை இச்சட்டம் மூலம் கைது செய்து அடைப்பதற்கென்றே சிறைகள் உருவாக்கப்பட்டன. வெலிக்கடை சிறை, மெகசின் சிறை, பூசா தடுப்பு முகாம், குருநாகல் சிறை, போகம்பர சிறை, அனுராதபுர சிறை என பல சிறைச்சாலைகள் உருவாக்கப்பட்டு தமிழ் அரசியல் கைதிகள் அப்பாவி தமிழ் இளைஞர்கள் என பலர் பல ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். இவ்வாறு விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்படும் அரசியல் கைதிகள் பலர் பல்வேறு காரணங்களைகாட்டி படுகொலை செய்யப்பட்ட வரலாறுகள் தொடர்கதையாக உள்ளது.

1995 ஆம் ஆண்டு சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க ஆட்சிக்காலத்தில் களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சுட்டு படுகொலை செய்யப்பட்டனர். அதன் பின்னர் அவரது ஆட்சியில் பிந்தனுவேவ தடுப்பு முகாமில் இருந்த தமிழ் சந்தேக அரசியல் கைதி கள் படுகொலை செய்யப்பட்டனர். அதன் பின்னர் 2012ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் வெலிக்கடை சிறைச்சாலையில் 27 அப்பாவி கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதே போல் அனுராதபுரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் மீது சிங்களக் கைதிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இதில் சிலர் கொல்லப்பட்டனர். இவ்வாறு சிறைச்சாலை படுகொலைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. கைதிகளை மனிதாபிமானமாக நடத்தி, அவர்கள் சிறைவாசம் முடிந்த பின்னர் நற்பிரஜைகளாக சமூகத்தில் இணைப்பதுவே சிறைச்சாலைகளின் நோக்கமாகும். இதனை விடுத்து அவர்களை மீண்டும் சமூகத்துக்குள் தீயவர்களாக உருவாக்கி சமூகத்தில் இணைக்கின்றது இந்த சிறைச்சாலைகள் நிர்வாகமும் அரசும். ஒருவர் தான் செய்த குற்றத்துக்காக தண்டனையை அனுபவித்து மீண்டும் அவ்வாறான குற்றங்களை செய்யாமல் ஒரு நற்பிரஜையாக வாழ முற்பட்டாலும் இவ்வாறான சிறைச்சாலைகள் இடம் கொடுப்பதில்லை என்பதை அண்மைக்கால செயற்பாடுகள் வெளிச்சம் காட்டி நிற்கின்றது. வெளியில் கிடைக்காத போதைப்பொருட்கள் அனைத்தும் சிறைச்சாலைகளுக்குள் சர்வசாதாரணமாக கிடைப்பதாகவும் போதைப்பாவனையற்ற ஒருவர் வேறு ஒரு பிரச்சினைக்கு தண்டனை அனுபவிக்க சிறை சென்று அவரது தண்டனை காலம் முடிவடைந்து வெளியில் வரும் பொழுது ஒரு மிகப்பெரிய போதைப்பொருள் பாவனையாளராக தான் வருகின்றார். இது யாருடைய தவறு. சிறைச்சாலை அதிகாரிகள் இவ்வாறானபோதைப்பொருள்விற்பனையில் கொடிகட்டி பறப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறானபோதைப்பொருள்பாவனையால் கைதிகளுக்கிடையில் மோதல்கள் உருவாகி சிறைச்சாலைக் கலவரமாக மாறி உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. இவ்வாறாக சிறைச்சாலைகள் உள்ள நிலையில் பல ஆண்டு காலமாக சிறைவாசம் அனுபவித்து வரும் அப்பாவி தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் எதுவித காரணமின்றி தமிழர்கள் என்ற ரீதியில் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் உள்ளவர்களின் வழக்குகள் ஏதுமின்றி தண்டனை அறிவிக்கப்படாமல் சிறை வாசம் அனுபவிக்கும் தமிழ் கைதிகள் என பலர் நாட்டில் உள்ள சிறைகளில் வாடுகின்றனர். இவர்களும் தங்கள் விடுதலையை கோரி தங்கள் வழக்குகளை விரைவுபடுத்த கூறி பலமுறை சாத்வீக ரீதியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பல உணவு தவிர்ப்பு போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. ஆனால் எது வித பயனும் கிடைக்கவில்லை. ஒட்டுமொத்த தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருந்து அவர்கள் ஆபத்தான கட்டத்தை அடையும் பொழுது வாக்குறுதிகள் வழங்கி அவர்களது போராட்டங்களை நிறுத்தி வைப்பார்கள். தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளாக இருக்கட்டும் அல்லது அரசுடன் இணைந்து செயற்படும் தமிழ் அரசியல் தலைமைகள் ஆகட்டும் இதற்கான ஓர் தீர்க்கமான முடிவு எடுக்க முடியாமல் கையாளாகாத்தனமான அரசியலை செய்து வருகின்றனர். ஆயுதப்போராட்டமானது 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்டதன் பின்னர் விடுதலைப்புலிகள் அழித் தொழிக்கப்பட்டதாகவும் ஒரே நாடு ஒரே மக்கள் என்ற கொள்கை அடிப்படையில் பயணிப்போம் என கூறும் அரசு, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க ஏன் தயக்கம் காட்டுகின்றது அல்லது நீண்டகாலம் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை ஏன் விடுதலை செய்ய மறுக்கின்றது.

அண்மையில் பாதீடு இறுதி நாள் விவாதத்தின் பொழுது கோட்டபாய அரசின் அமைச்சராக உள்ள டக்ளஸ் தேவானந்தா அவர்கள் போர் இறுதிக்கட்டத்தை நெருங்கும் பொழுது அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுடன் இந்த யுத்தத்தை நிறுத்த பேச வருமாறு தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகளை தான் கேட்டதாகவும் ஆனால் அவர்கள் வரவில்லை என்றும் இதனால் இவ்வாறு அழிவுகள் ஏற்பட்டதாகவும் அவர் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். அன்று அவர் கேட்ட பொழுது தமிழ் அரசியல் தலைமைகள் வரவில்லை என்ற கூற்று உண்மையாக இருந்தால் அந்த அழிவுக்கு அவர்களும் காரணமாக அமைகின்றார்கள். ஆனால் இப்பொழுது அதே மகிந்த ராஜபக்ச அவர்கள் பிரதமராகவும் தம்பி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஜனாதிபதியாகவும் அதுவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் உள்ள நிலையில் இதே டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தற்பொழுதும் அமைச்சராக உள்ள நிலையில் இப்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா 3ஆம் அலையை காரணம் காட்டி அத்துடன் சிறைச்சாலை கைதிகளுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு மிகப்பெரும் பிரளயம் நடந்துவரும் நிலையில் இப்பொழுதாவது மகிந்த ராஜபக்ச அவர்களிடம் இக்கைதிகளில் சிலரையாவது விடுதலை செய்ய அரசுக்கு அழுத்தம் கொடுக்க அல்லது இது தொடர்பான ஆக்கபூர்வமான செயற்பாடு எதுவுமின்றி வெறுமனே எதிர்தரப்பை குற்றம் சாட்டியே இவரது அரசியல் வாழ்க்கை கடந்த 30 வருடங்களாக செல்லுகின்றது.

மறுபக்கம் தமிழ்த் தேசியம் பேசும் தமிழ் தலைமைகள் அரசியல் தீர்வு - நிரந்தர தீர்வு தமிழர்களுக்கான அரசியல் விடிவு போன்றவற்றைத் தான் பெற முடியாமல் கையறு நிலையில் இருந்தாலும் ரணில் - மைத்திரி ஆட்சியைத் தக்கவைக்க முண்டு கொடுத்துக் கொண்டிருந்த வேளையிலாவது ஒரு சில அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முயற்சிக்காமல் வெறுமனே 5 வருடங்கள் தமிழ் மக்களை முட்டாளாக்கி அரசியல் சாணக்கியம் செய்து விட்டு இன்று பாராளுமன்றத்தில் இன ஒற்றுமை, முஸ்லிம்களுக்கும் குரல் கொடுக்கின்றோம் எனவும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வீர ஆவேச வசனங்களும், அடுக்குமொழி சொற்றொடர்களும் பேசி என்ன விடயத்தை சாதிக்கப் போகின்றீர்கள். கடந்த 30 வருடங்களாக ஆயுதங்கள் கொண்டு போராடி கேட்காத காதுகள் இன்று ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின்னர் நீங்கள் குரல்வளை கிழிய கத்தி கேட்கவா போகின்றது. செவிடன் காதில் ஊதிய சங்கு போல் அவர்கள் அமைதியாகவும் உங்களது பாராளுமன்ற பேச்சுக்களை பார்த்து நமட்டு சிரிப்புடன் உட்கார்ந்து இருக்கின்றார்கள். நீங்கள் இவ்வாறு கத்தி ஒரு கைதியை யாவது விடுவியுங்கள் பார்ப்போம். அன்பான எம் தேசிய தமிழ் தலைமைகளே! அரசுடன் இணைந்து செயற்படும் எம் தமிழ் தலைமைகளே! நீங்கள் இனி அரசியல் ரீதியாகப் போராடவேண்டாம். அரசியல் ரீதியானப் போராட்டத்தை மக்கள் மயப் படுத்துங்கள். உங்களது அரசியல் திருகு தாளங்கள் அனைத்தையும் மக்கள் புரிந்து விட்டார்கள்.

அண்மையில் தியாகி திலீபனின் நினைவேந்தலை தடுக்கும்பொழுது சுதாரித்துக்கொள்ளாமல் அப்பாடா ஒரு மாதிரி திலீபனின் நினைவேந்தலை வீட்டில் விளக்கேற்றி முடித்துவிட்டோம். இனி தாங்கச் செல்லலாம் என இருந்துவிட்டு மாவீரர் தினம் வரும்பொழுது நித்திரையால் எழும்பியவர்கள் போல ஓடித்திரிந்து எதைச் சாதித்தீர்கள். அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே இங்கு எதுவும் நடக்கும். எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்ற சொல் அழகாகாது. வீடுகளில் உங்கள் அரசியல் அலுவலகங்களில் விளக்கேற்றி அதனைப் படம்பிடித்து செய்திகளில் பிரசுரித்து அதற்கு சில முஸ்லீம் தலைமைகள் இது தமிழன், தன்மானத்தமிழன் என்று போற்றி அறிக்கை விட்டதைப் பார்த்து புளகாங்கிதம் அடைந்த நீங்கள் இனி என்ன செய்வதாக உத்தேசம்.

பல்கலைக்கழக சமூகம் கூட இம்முறை மௌனித்துப்போனது. அதற்குள்ளும் சாக்கடை அரசியல் புகுந்துவிட்டது என எண்ணத்தோன்றுகின்றது. போரில் இறந்த ஒரு மாவீரன் அவனது தாய்க்கு அவன் மகன், தாய் தன் மகனுக்கு அஞ்சலி செலுத்த முடியவில்லை, சகோதரன் தன் சகோதரிக்கு அஞ்சலி செலுத்த முடியவில்லை, இறந்தவர்களின் உறவினர்கள் அஞ்சலி செலுத்த முடியவில்லை. அரசின் பார்வைக்கு அவர்கள் பயங்கரவாதிகளாக தோன்றலாம். ஆனால் இறந்த வீரர்கள் தமிழ் மக்களின் உறவுமுறைகளாகத் தான் இருப்பார்கள். 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் இம்மண்ணில் வந்து போராடிய பொழுது இறந்த இந்திய இராணுவ வீரர்களின் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்த இந்திய இராணுவத்தளபதி மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவர் அஞ்சலி செலுத்த அரசு அனுமதிக்கின்றது. இந்திய இராணுவம் அந்நிய இராணுவம். எம் மண்ணை ஆக்கிரமிக்கின்றது.

தொடரும்...

**தாயகத்தான்**

# ஈழத் தமிழருக்கு கேடுவிளைவித்த ஒரு சிங்கள அரசியல்வாதியே சரத் பொன்சேகா

இந்த நாடு சிங்களவர்களுக்கே உரியது. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. மகிந்த மற்றும் கோத்தபாயக் கூட்டணிக்கு நிகராக ஈழத் தமிழருக்கு கேடுவிளைவித்த ஒரு சிங்கள அரசியல்வாதியே சரத் பொன்சேகா. சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராக ஒரு மிக முக்கிய தாக்குதலை விடுதலைப் புலிகள் ஆரம்பித்த தினம். சிறிலங்காவில் மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சிறிலங்கா ஆணையிறவுப் படைத்தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மிகப் பெரிய இராணுவ நடவடிக்கை ஒன்றினை ஆரம்பித்திருந்தார்கள்.

ஒரு பிரதான இராணுவ முகாம் மற்றும் ஆறு சிறிய முகாம்களைக் கொண்ட அந்த பாரிய இராணுவத் தளத்தில், சிறிலங்கா சிங்க ரெஜமன்ட் (Sri Lanka Sinha Regiment) இனது ஆறாவது பட்டாலியனை (6th battalion) சேர்ந்த 600 படைவீரர்கள் தங்கியிருந்தார்கள். அந்தப் பாரிய படைத்தளத்தைத்தான் விடுதலைப்புலிகள் அந்த நேரத்தில் முற்றுகையிட்டிருந்தார்கள். ஆனையிறவு சிறிலங்காப் படைத்தளம் மீதான முற்றுகைக்கு விடுதலைப் புலிகள் சூட்டியிருந்த பெயர் ஆகாய கடல் வெளிச்சமர். விடுதலைப் புலிகளுடைய வரலாற்றில் முதன்முறையாக பெயர் சூட்டி ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளும் அளவிற்கு, அந்தச் சமர் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

விடுதலைப் புலிகளின் முதலாவது மரபுப் படை அணியான சார்ள்ஸ் அன்டனி படைப்பிரிவு அந்தத் தாக்குதலில் பிரதான பங்கு வகித்திருந்தது. விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி பால்ராஜ் தலைமையில் நூற்றுக்கணக்கான விடுதலைப் புலி உறுப்பினர்கள் அந்த முற்றுகைச்சமரை மேற்கொண்டிருந்தார்கள். விடுதலைப் புலிகளின் சொந்தத் தயாரிப்பான கவச வாகனங்கள், பசிலான் 2000 என்ற பீரங்கிகள், பாபா செல்கள் இவற்றுடன் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் என்று ஏராளமான ஆயுதத் தளபாடங்களை அந்தச் சண்டையில் பயன்படுத்தி, ஆணையிறவுத் தளத்திற்கு பாரிய அச்சுறுத்தலை விடுத்திருந்தார்கள் விடுதலைப் புலிகள்.

இரண்டாம் கட்ட ஈழ யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து, கொக்காவில், யாழ் கோட்டை போன்ற இராணுவ முகாம்களை இதேபோன்ற முற்றுகையினூடாகவே வெற்றி கொண்ட விடுதலைப்புலிகள், ஆணையிறவுத் தளத்தின் மீதும் அதே வகையான முற்றுகையை மேற்கொண்டிருந்தார்கள். உளவு இயந்திரங்கள், புள்டோசர்களில் இரும்புத் தகடுகளைப் பொருத்தி, திறந்த வெளிகளில் பெரும் எண்ணிக்கையிலான போராளிகளை முன்நகர்த்தக்கூடிய கவச வாகனங்களை புலிகள் தயாரித்திருந்தார்கள். ஆணையிறவின் வடக்குப் பகுதிகளில் தொடர் தாக்குதல்களை நடாத்தி, முன்னேறுவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்திவிட்டு, ஆணையிறவின் தென்பகுதியான பரந்தன் வழியாகவே பிரதான முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் புலிகள் திட்டமிட்டிருந்தார்கள். தளபதி பால்ராஜ் தலைமையிலான சார்ள்ஸ் அன்டனி படைப் பிரிவு தென் பகுதியினூடான நகர்வினை வெற்றிகரமாக மேற்கொள்ள ஆரம்பித்தது.

விடுதலைப் புலிகள் தமது ஆரம்பக்கட்ட தாக்குதலில் ஆணையிறவுப் படைத்தளத்தின் தென்பகுதியில் அமைந்திருந்த சுற்றுலா விடுதியைக் கைப்பற்றிப் பலமாக நிலையெடுத்திருந்தார்கள். ஆணையிறவுப் படைத்தளத்தின் இரண்டாவது முகாமான உப்பளம் அலுவலக முகாம் மீதான தாக்குதலைத் தொடுத்தபடி, விடுதலைப் புலிகள் தாம் கைப்பற்றிய பகுதிகளைப் பலப்படுத்திக்கொண்டிருந்த அதேவேளை, மற்றொரு தந்திரோபாயத் தாக்குதலைத் திட்டமிட்டிருந்தார்கள் புலிகளின் தளபதிகள். ஆணையிறவுத் தளத்தின் பிரதான முகாம் பகுதியில் இருந்து உப்பளம் அலுவலக முகாமிற்கு வழங்கப்படக் கூடியதான வளங்கல்களைத் தடுக்கும் நடவடிக்கையில் சார்ள்ஸ் அன்டனி படை அணியின் ஒரு சிறப்புக் கொமாண்டோ அணி ஈடுபட்டது. மேஜர் பாலா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை கிட்டத்தட்ட ஒரு கரும்புலித் தாக்குதல் நடவடிக்கையின் பாணியிலேயே மேற்கொள்ளப்பட்டது.

இப்படியான பின்னணியில், 1990ம் ஆண்டு ஜீலை மாதம் 13ம் திகதி மாலை 7 மணிக்கு, மேஜர் ரெட்டி தலைமையிலான புலிகளின் அணிகள், உப்பளம் அலுவலக முகாம் மீதான தாக்குதலை ஆரம்பித்தன. அந்த முகாமின் பல காவல் அரண்களைக் கைப்பற்றி, ஒரு பலமான நிலையில் முற்றுகையைப் புலிகளின் அணிகள் இறுக்கியிருந்த நிலையில், ஆணையிறவின் வடமுனையில் உக்கிரமான தாக்குதல்களைத் தொடங்கினார்கள் விடுதலைப் புலிகள்.

பின் நாட்களில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழ்ச்செல்வனே அந்த நேரத்தில் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதியாகச் செயலாற்றிக்கொண்டிருந்தார். தளபதி தினேஷ் என்று அழைக்கப்பட்ட தமிழ்ச்செல்வனின் தலைமையிலான அணிகள் ஆணையிறவின் வடக்குப் பகுதிகளினூடான தாக்குதல்களைத் தீவிரப்படுத்த, சிறிலங்காவின் ஆணையிறவுத்தளம் என்பது எந்த நேரத்திலும் புலிகளின் கைகளுக்குள் வீழ்ந்துவிடக்கூடிய ஒரு நிலைக்குள் வந்தது. நடுங்கியது சிறிலங்கா தலைமை. விடுதலைப் புலிகளால் வீழ்த்தப்பட்டுவிடக்கூடிய ஆபத்து நிலையில் அணையிறவுக் கூட்டுப்படைத்தளம் இருந்தது.

பலமுனைகளாலும் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில், ஆணையிறவுப்படைத்தளத்தின் மீது இறுக்கப்பட்ட புலிகளின் முற்றுகையைக் கண்டு சிறிலங்காத் தலைமை நடுங்கியது. ஆணையிறவுத் தளம் மாத்திரம் விடுதலைப் புலிகளின் கைகளில் சிக்குண்டுவிட்டால், அதனால் ஏற்படக்கூடிய இராணுவ மற்றும் அரசியல் பேரிழப்பை நினைத்துச் சிங்களத் தலைமை நடுநடுங்கியது. அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாத ஒரு நிலை. அடுத்து என்ன செய்வது என்றும் புரியாத ஒரு தர்மசங்கடமான நிலை. சிறிலங்காவின் அரசியல் தலைமை ஒரு அவசரக் கூட்டத்தைக் கூட்டியது. ஜனாதிபதி பிரேமதாச தலைமையிலான அந்தக் கூட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தின் வடபிராந்தியக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, யாழ் பிராந்திய இராணுவ அதிகாரி பிரிகேடியர் விஜய விமலரெட்ன, முப்படைகளின் தளபதி, இராணுவத் தளபதி உட்பட பல இராணுவ அரசியல் உயரதிகாரிகள் பங்குபற்றினார்கள். (1991 ஆண்டு மார்ச் மாதம் 2ம் திகதி அன்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் உதவிப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன கொல்லப்பட்டிருந்த நிலையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது). என்ன விலைகொடுத்தாவது, ஆணையிறவுத் தளத்தைக் காப்பாற்றியேயாகவேண்டும் என்ற உத்தரவு சிறிலங்காவின் முப்படைகளுக்கும் வழங்கப்பட்டது. ஆணையிறவுத் தளத்திற்கு மேலதிக படையினரை அனுப்பி அந்தத் தளத்தையும், அந்த தளத்தில் இருந்த படையினரையும் காப்பாற்றியாகவேண்டும் என்கின்ற கட்டளை இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டது.

ஆணையிறவை மீட்கும் நடவடிக்கை எவ்வாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்ற ஆலோசனையை வழங்குவதற்காக வெளிநாட்டு நிபுனர்களை உள்ளடக்கிய ஒரு விசேட குழுவையும் பிரேமதாசா அங்கு தயார் நிலையில் வைத்திருந்தார். அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் குழுவின் ஆலோசனையின் பெயரில் பாரிய தரையிறக்கத்தை ஆணையிறவை அண்டிய கடற்கரை ஒன்றில் செய்வது என்ற முடிவு அங்கு எடுக்கப்பட்டது. அந்த சிறப்பு நடவடிக்கையில் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 10,000 சிறப்புப் படையினர் ஈடுபடுத்தப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.



சிறிலங்காவின் போரியல் வரலாற்றைப் பொறுத்தவரையில் அது மிக மிகப் பாரிய ஒரு படை நடவடிக்கை. கடல் வழியாக இத்தனை பெரும் படையினரை தரையிறக்கிய வரலாறு சிறிலங்காவின் சரித்திரத்தில் அதுவரை நடைபெற்றிருக்கவில்லை. அது போன்ற பாரிய தரையிறக்க முன் அனுபவமும் சிறிலங்கா படைத்தரப்பிற்கு இருக்கவில்லை. அதுவும், விடுதலைப் புலிகளின் வாய்களுக்குள் படையினர் தரையிறக்கப்படவேண்டும். அந்த நடவடிக்கையில் சிறிய தவறு ஏற்பட்டுவிட்டாலும், சிறிலங்காவின் இராணுவத்தினது மட்டுமல்ல, ஒட்டுமொத்த சிறிலங்கா தேசத்தினதும் எதிர்காலமும் கேள்விக்குள்ளாகிப் போய்விடும். எனவே அந்த ஒப்பரேசனை மிகக் கவனமாகச் செய்யவேண்டும். நேர்த்தியாகச் செய்யவேண்டும். வெற்றிகரமாகச் செய்யவேண்டும். அந்த நேரத்தில் படைத்துறைத் தலைமை மத்தியில் இருந்த மிக முக்கியமான கேள்வி இதுதான்: யாரால் இந்தத் துணிகரமான செயலை கவனமாக, நேர்த்தியாக, வெற்றிகரமாகச் செய்ய முடியும்? அந்த நடவடிக்கைக்கு யார் தலைமை தாங்குவது? சிறிலங்காவின் உயரதிகாரிகள் அனைவரது வாய்களில் இருந்தும் எந்தவிதத் தயக்கமும் இன்றி உடனடியாக வெளிவந்த பெயர் சரத் பொன்சேகா. அந்த நேரத்தில் சிறிலங்கா இராணுவத்தில் சாதாரண கேணல் தரத்தில்தான் பணியாற்றிக்கொண்டிருந்தார் சரத் பொன்சேகா. எனினும் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரட்ண தலைமையிலான அந்த தரை இறக்க நடவடிக்கையின் முதலாவது தரையிறக்கப் படை அணியை தலைமை தாங்கி நடாத்திச் செல்லும் பொறுப்பு கேணல் சரத் பொன்சேகாவிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. சிறிலங்கா இராணுவத்தின் சிங்க ரெஜிமென்ட், கெமுனுவாட்ச் படைப்பிரிவு, கஜபா ரெஜிமென்ட், ஆட்டிலறிப் படைப்பிரிவு போன்றவற்றில் இருந்து 10000 படையினர் தெரிவுசெய்யப்பட்டு திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் இருந்து கப்பல்களில் ஏற்றப்பட்டார்கள்.

கேணல்சரத்பொன்சேகாதலைமையிலான 3வது பிரிகேட் படையினர் முதலாவது தரையிறக்கத்தைச் செய்வதாகவும் அதனைத் தொடர்ந்து, மற்றைய படையினர் தொடர் தரையிறக்கங்களை மேற்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது. எடித்தரா, விக்கிரம போன்ற போர்க் கப்பல்கள் உட்பட ஏராளமான பீரங்கிப்படகுகள், தரையிறக்கப் படகுகள், உலங்குவானூர்திகள், அந்த நேரம் சிறிலங்கா விமானப்படையிடம் இருந்த Sia Marchetti SF-260 என்ற குண்டுவீச்சுவிமானங்கள் உட்பட சிறிலங்கா இராணுவத்தின் அனைத்து வளங்களும் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன. ஆணையிறவுத் தளத்திற்கு கிழக்காக சுமார் 12 கி.மீ தொலைவில் உள்ள வெற்றிலைக்கேணி கடற்கரையில் 1990ம் ஆண்டு ஜுலை மாதம் 15ம் திகதி சரத் பொன்சேகா தலைமையிலான சிறிலங்கா இராணுவத்தினர் தரையிறங்கினார்கள். விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்புக்களையும் முறியடித்துக்கொண்டு அங்குலம் அங்குலமாக நகர்ந்து, 1991ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4ம் திகதி சரத் பொன்சேகா தலைமையிலான மீட்புப் படையினர் ஆணையிறவை வந்தடைந்தார்கள். சுமார் 18 நாட்கள் நடைபெற்ற இந்த மீட்பு நடவடிக்கையில் 600 விடுதலைப் புலிகள் வரையில் வீர மரணம் அடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தார்கள்.

(General Gardihewa Sarath Chandralal Fonseka) ஜெனரல் சரத் பொன்சேகா 1950ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி, தென் இலங்கையின் அம்பலங்கொட என்ற இடத்தில், பீட்டர் மற்றும் பியவதி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை அம்பலங்கொட தர்மசோகா மற்றும் கொழும்பு ஆனந்தா கல்லூரிகளில் மேற்கொண்ட சரத் பொன்சேகா, தனது 20வது வயதில் சிறிலங்கா இராணுவத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். நல்ல விளையாட்டு வீரனான சரத் பொன்சேகா, இராணுவத்தில் அனைவரது கவனத்தையும் ஈர்த்த திறமையான ஒரு அதிகாரியாக வளர்ந்து, சிறிலங்கா இராணுவத்தில் எந்த அதிகாரியும் பெறாத உயர் பதவியைப் பெற்றுச் சாதனை படைத்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையிலும் சரத் பொன்சேகா என்ற இராணுவ அதிகாரி இராணுவ ரீதியாக புலிகளுக்கு மிகவும் மோசமான சேதத்தினை ஏற்படுத்திய ஒரு அதிகாரியாகவே, பல ஆண்டுகளாக இருந்து வருகின்றார். சிங்கள இராணுவ வீரர்கள் மத்தியில் பிரபல்யமாகியிருந்த சரத் பொன்சேகா, தமிழ் மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் முன்னெடுத்த ஆயுத ரீதியிலான போராட்டத்தை நசுக்குவதில் மிகவும் மும்முரமாகச் செயற்பட்டு, இறுதியில் அதில் அவர் வெற்றியும் கண்டிருந்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட குறிப்பிடத்தக்க முக்கியமான நடவடிக்கைகளில் சரத் பொன்சேகாவின் பங்கு என்பது, இன்றியமையாததாகவே இருந்து வந்துள்ளது. விடுதலைப் புலிகளின் போரியல் வரலாற்றில் அவர்களுக்கு பின்னடைவுகளையும், பாதிப்புக்களையும், இழப்புக்களையும் ஏற்படுத்திய சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளில் ஏதோ ஒரு விதத்தில் சரத் பொன்சேகாவின் பங்கு இருந்ததாகவே பதிவுகள் தெரிவிக்கின்றன.

11ஆம் பக்கம் பார்க்க...

சூழியோடி

# சுற்றுலாத்துறை மீள் திறப்பும் அரசின் விசப்பரீட்சையும்


இலங்கையில் கொரோனா வைரஸ் முதலாம் அலை 2020 மார்ச் மாதம் கண்டறியப்பட்டது. நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள் உடனடியாக செயற்பட்டு நாட்டை முற்றாக முடக்கி நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு மாவட்டங்களுக்கிடையேயான போக்கு வரத்துக்கள் இடைநிறுத்தப்பட்டு பாடசாலை கள் கல்விசார் செயற்பாடுகள் அனைத்தும் மூடப்பட்டது. அத்துடன் இந்த முதலாம் அலையானது இலங்கை நாட்டுக்குள் வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவரினால் தான் ஏற்பட்டது என கண்டறியப்பட்டு வெளிநாடுகளிலிருந்து எவரும் நாட்டுக்குள் வருவதற்கு அனுமதி இல்லையென அரசு அறிவித்ததுடன் விமானப் போக்குவரத்துக்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக இந்த முதலாம் அலையின் வீரியம் தடுக்கப்பட்டு 3 மாத காலத்துக்குள் முறியடிக்கப்பட்டது. இந்த முதலாம் அலையினால் பாதிக்கப்பட்ட மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கையானது வெறும் 2500 பேராகவும், இந்த வைரஸ் தாக்கத்தால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 12 பேராகவுமே இருந்தது. இவ்வாறு வெற்றிகரமாக தடுக்கப்பட்ட கொரோனாவிலிருந்து மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினர். நாடும் முடக்கப்பட்டு இருந்ததால் பொருளாதார ரீதியில் சரிவு ஏற்பட்ட நிலையில் ஒருவாறு மீண்டெழும் சந்தர்ப்பத்தில் 2ஆம் அலை என்னும் பேரிடி நாட்டில் வந்து விழுந்தது.

ஆம் கொரோனாவின் இரண்டாம் அலையானது மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் பெண்ணுக்கு இத்தொற்று உருவாகி நாடு ஒரு பெரும் பிரளயத்தை சந்திக்க தொடங்கியது. ஆடைத்தொழிற்சாலை கொரோனா கொத்தணி தனது விஸ்வரூபத்தை பேலிய கொடை மீன்சந்தைக்கு விரிவுபடுத்தியது. இந்நிலையில் நாடு முடக்கப்படும் என மக்கள் நினைத்த பொழுது நாடு முடக்கப்படாமல் ஆடைத்தொழிற்சாலை உள்ள கம்பஹா மாவட்டம் மற்றும் பேலிய கொடை பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டன. பாடசாலைகள் மூடப்பட்டன. விமானப் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டன. ஆனால் மாவட்டங்களுக்கிடையேயான போக்குவரத்துக்கள் இடம்பெற்ற வண்ணம் இருந்தன. நாட்டில் ஏற்பட்ட முதலாம் அலையின் போது அரசு எடுத்த நடவடிக்கையை இரண்டாம் அலையின் போது எடுக்கவில்லை. நாடு முற்றாக முடக்கப்படும் பட்சத்தில் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கவேண்டிவரும் என நினைத்து நாட்டை முடக்காமல் தொற்று அதிகமுள்ள பிரதேசங்களை மட்டும் முடக்கும் முயற்சியில் அரசு இறங்கியது.

ஆனால் இத்திட்டமானது தற்பொழுது கொரோனாவைரசின்வீரியத்துக்கு முன்னால் ஒன்றும் செய்ய முடியாத கையறு நிலையில் அரசு காணப்படுகின்றது. இத்தொற்றின் வீரியமானது முதலாம் அலையின் வீரியத்தை விட பல மடங்கு அதிகமானது என சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் கோட்டாபய ராஜபக்ச அவர்கள் பதவியேற்று ஒருவருடம் பூர்த்தியாகிய நிலையில் எதுவிதமான அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ள கொரோனா வைரஸ் இடம் கொடுக்காமல் தாக்கி வருகின்றது. அவருக்கு முன் மிகப்பெரிய இரண்டு சோதனைகள் உள்ளன. ஒன்று கொரோனா வைரஸை முறியடித்து நாட்டை காப்பாற்ற வேண்டும். அடுத்தது கொரோனா வைரஸ் தாக்கம் உள்ள அதே காலப்பகுதியில் கொரோனாவுடன் போராடி பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என இரண்டு சோதனைகளில் சிக்கியுள்ளார். இவ்வாறான சோதனைகள் இந்த ஜனாதிபதிக்கு மட்டுமானதல்ல. இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளுக்கும் இவ்வாறு இரண்டு சோதனைகள் அவர்களது ஆட்சிக்காலங்களில் காணப்பட்டது. ஒன்று தமிழர்களின் விடிவுக்கான ஆயுதப்போராட்டம், மற்றையது ஆயுதப்போராட்டத்தை தடுத்து நிறுத்தியபடி பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளுவது என இரண்டு பெரும் சோதனைகள் அன்றும் காணப்பட்டன. இவ்வாறான நிலையில் கோட்டாபய அரசானது திக்கிதிணறி வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது. மினுவாங்கொடை அதாவது கம்பஹா மாவட்டத்தில் உருவான கொத்தணியானது இலங்கையின் அனைத்து மாவட்டங்களுக்கும் பரவியுள்ளது. தொற்றாளர்களின் எண்ணிக்கையானது இப்பத்தி எழுதும் வரை 31 ஆயிரத்தை கடந்து விட்டது. மரணித்தவர்களின் எண்ணிக்கை 150 ஐ நெருங்குகின்றது.

இந்நிலையில் அரசு தனது சுயநல அரசியல் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை காணக்கூடியதாக உள்ளது. இவ் இரண்டாம் அலை தொடங்கிய சில தினங்களில் 19ஆம் திருத்தச்சட்டத்தை நீக்கி 20ஆம் திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற மும்முரமாய் செயற்பட்டு அதில் வெற்றியும் பெற்றது. அதன் பின்னர் பாதீட்டை கொண்டுவந்து இப்பொழுது நிறைவேற்றியுள்ளது. ஆனால் கொரோனா விடயமானது தற்பொழுது அரசுக்கு பெரும் பிரச்சினையாகவோ அல்லது அது மக்கள் மீது செலுத்தும் கோர தாண்டவத்தையோ அரசு எள்ளளவும் சிந்திப்பதாக தெரியவில்லை. ஒரு விடயத்தை மட்டும் இவ் அரசானது சிறப்பாக செயற்படுத்தி வருகின்றது. அதாவது கொரோனா வைரஸ் அச்சுறுத்தலை பயன்படுத்தி தமிழ் மக்களை அடக்க முயல்கின்றது. அவர்களுடைய கலாச்சார நிகழ்வுகள், சமய நிகழ்வுகள், உறவுகளின் நினைவேந்தல்கள் என அனைத்தையும் இக் கொரோனா தொற்றை காரணம் காட்டி தடுத்து தனது இனவாத முகத்தை காட்டி வருகின்றது. அத்துடன் கொரோனா வைரசால் மரணிக்கும் உடல்களை வெளிநாடுகளில் அடக்கம் செய்ய அனுமதித்துள்ள நிலையில் எமது நாட்டில் அதனை தடுத்து நிறுத்தி எரியூட்டல் செய்ய பணித்துள்ளது. இது எமது நாட்டில் உள்ள முஸ்லிம் மக்களின் சமய சடங்குகளுக்கு எதிரானது. அவர்களின் இறுதி நிகழ்வை கூட செய்யவிடாது தடுத்து தனது இனவெறுப்பு கைங்கரியத்தை மேற்கொள்கின்றது.

இன்று கொரோனா பரவலில் முக்கிய பகுதியாக கொழும்பு காணப்படுகின்றது. அங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை தினம் தினம் அதிகரித்து செல்கின்றது. எமது நாட்டின் மிகப்பெரும் பொருளாதார மையங்கள் உள்ள பகுதியாக கொழும்பு மாவட்டம் அடுத்து கம்பஹா மாவட்டம் விளங்குகின்றது. இங்கு கைத்தொழில் மையங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. அடுத்து பெருந்தோட்ட ஏற்றுமதி மாவட்டங்களான கண்டி நுவரெலியா போன்ற பகுதிகள் காணப்படுகின்றன. இக் கொரோனா வைரஸின் தாக்கம் மேற்குறிப்பிட்ட நான்கு மாவட்டங்களில் அதிகமாக காணப்படுகின்றன. இதனால் பொருளாதார ரீதியாக மிகவும் பின்னடைவை சந்தித்து செல்ல உள்ளது. இதற்கு தற்பொழுது முழுக் காரணமும் இவ் அரசின் அசமந்த செயற்பாடு தான் என சுகாதார அறிவியல் சார் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். எவ்வாறெனில் நாட்டை முழுமையாக முடக்காவிட்டாலும் பரவாயில்லை. மாகாணங்களுக்கிடையேயான அல் லது மாவட்டங்களுக்கிடையேயான போக்குவரத்து உட்பட அனைத்து செற்பாடுகளையும் கொரோனா வைரஸ் 2ஆம் அலை காணப்பட்ட மினுவாங்கொடை பகுதி அமைந்துள்ள கம்பஹா மாவட்டத்தை முற்றாக லொக்டவுன் செய்து அம் மாவட்டத்திலிருந்து ஏனைய மாவட்டங்கள் தொடர்பு கொள்ள முடியாதவாறு மிக இறுக்கமான ஓர் நடைமுறையை கொண்டு வந்து இருந்தால் இவ்வாறு இவ் வைரசானது பரவுவதை குறைத்து இருக்கலாம் என அவர்கள் தெரிவிக்கின்றனர். அரசு அதனை செய்தது தான் ஆனால் குறுகிய



காலத்துக்குள் மாவட்டங்களுக்கிடையேயான போக்குவரத்தை மீள ஆரம்பித்த நிலையில் இவ் வைரசின் தாக்கம் கைமீறி போயுள்ளது. இவ் அலையின் ஆரம்பத்தில் அதிகமாக காணப்பட்டு சில நாட்களின் தொற்றாளர் எண்ணிக்கை குறைந்த நிலையில் தற்பொழுது அதிகரித்து செல்லும் நிலையில் அரசு அடுத்த விசப்பரீட்சையில் தற்பொழுது இறங்கியுள்ளது. அது தான் சுற்றுலாத்துறையினரை நாட்டுக்குள் அனுமதிப்பது என்ற நடைமுறைக்கு வந்துள்ளது.

பொருளாதார கட்டமைப்பு வீழ்ச்சியை சரிசெய்ய அரசு எடுத்துள்ள ஆயுதம் சுற்றுலாத்துறை. எமது நாட்டின் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிப்பது சுற்றுலாத்துறை என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. சுற்றுலாத்துறையினால் பல கிராமங்கள் பல நகரங்கள் அபிவிருத்தி அடைந்துள்ளமை மறுக்க முடியாத உண்மை. இச் சுற்றுலாத்துறையில் பல கிராமங்களில் கைத்தொழில் நடவடிக்கைகள் உருவாகி பின்தங்கிய நகரங்கள், கிராமங்கள் வளர்ச்சி அடைந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

ஆனால் அரசு இப்பொழுது உள்ள சூழ்நிலையில் அதுவும் இரண்டாம் அலை தோன்றக் காரணமானது சீனாவில் இருந்து வந்த தொழில்நுட்ப குழுவினரால் என கண்டறியப்பட்ட நிலையில் மீண்டும் நாட்டுக்கு சுற்றுலாத்துறையினரை அனுமதிப்பதானது மிகவும் ஓர் முட்டாள்தனமான செயற்பாடாகும். இன்று உலகில் கொரோனா வைரசின் தாக்கத்தால் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன், கனடா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகள் மிகவும்பாதிக்கப்பட்டுபிரான்ஸ், பிரித்தானியா, கனடா, ஜேர்மன் போன்ற நாடுகள் நாடுதழுவிய ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில் உலக நாடுகளின் கொரோனா வைரஸ் உயிரிழப்பானது 20 இலட்சத்தை தொடும் நிலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியை கடந்துள்ள நிலையில் இலங்கை அரசானது தற்பொழுது சுற்றுலா பயணிகளை உள்வாங்க முயற்சிப்பதானது மிகப்பெரும் ஆபத்தான கட்டத்தை நோக்கி நாடு பயணிக்கும் என்பதில் ஐயமில்லை. நோய்த்தொற்றின் தாக்கம் குறைந்த நாடுகளின் சுற்றுலாத்துறையினரை நாட்டுக்குள் சுகாதார முறைப்படி அனுமதிக்க அரசு முயல்கின்றது.

இதுவும் ஓர் சாத்தியமற்ற விடயம். ஏனெனில் கொரோனா வைரஸ் தாக்கம் குறைந்த நாடுகளின் சுற்றுலாப்பயணிகள் எமது நாட்டுக்குள் சுகாதார முறைப்படி வருவார்களாக இருந்தால் எமது நாட்டில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியதாக அமையும். இது ஒருபுறமிருக்க ஜனாதிபதி கோட்டாபய அவர்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல பொருட்களை தடை செய்துள்ளார். குறிப்பாக மோட்டார் வாகனங்கள், மின் பொறியியல் உபகரணங்கள் என அனைத்துப் பொருட்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ் உபகரணங்களை உற்பத்தி செய்யும் நாடுகள் இலங்கை மீது அதிருப்தி கொண்டுள்ளன. இதுவொரு வகையில் எமது நாட்டுக்கு ஆரோக்கியமான விடயமாக காணப்பட்டாலும் அதாவது தன்னிறைவு பொருளாதாரக் கொள்கையை நோக்கி நாடு நகர்ந்து செல்வது ஓர் ஆரோக்கியமான விடயமாக தென்பட்டாலும் அவ்வாறான தன்னிறைவு அடைவதற்கு நீண்டகாலம் எடுக்கும் நிலையிலும் அடுத்து எமது நாடு சகல வல்லரசு நாடுகளிடமும் கடன்பட்டு உள்ள நிலையில் இவ்வாறு அதிகமாக எவ் நாடுகளிடம் கடன்பட்டுள்ளதோ அந் நாடுகளை எமது நாட்டுக்குள் தொழிற்சாலைகள் உருவாக்கி செயற்பட அனுமதி வழங்கியுள்ளது.


குறிப்பாக சீனா, இந்தியா, அமெரிக்க, ஜப்பான் போன்ற நாடுகளின் தொழிற்சாலைகள் இங்குள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் எமது உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு வெளிநாடுகள் தடை செய்ய முயற்சிகள் மேற்கொள்கின்றன. ஏற்கனவே எமது நாட்டின் தேயிலை ஏற்றுமதியானது பாரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஓர் காலத்தில் இலங்கையின் தேயிலைக்கு இருந்த மவுசு குறைந்துள்ளது. அதற்கு இவ் ஆட்சிக்கு முன்பிருந்த நல்லாட்சி அரசில் நடந்த சில செயற்பாடுகளே காரணம். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையில் கலப்படம் செய்து அனுப்பியது பிடிபட்டதால் எமது நாட்டின் தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தற்போதைய அரசு அதனை நிவர்த்தி செய்யும் முகமாக எமது தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளின் தூதுவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்தி வீழ்ச்சியான தேயிலை ஏற்றுமதியில் மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளமையானது இங்கு பாராட்டத்தக்க விடயம். ஆனால் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி தடையானது சுற்றுலாத்துறையிலும் தாக்கம் புரியும் என்பதில் சந்தேகம் இல்லை. இவ்வாறு அரசு எடுக்கும் செயற்பாடுகளுக்கு மறுதாக்கம் ஒன்று இடம்பெறும்.

ஆகவே இப்பொழுது உள்ள இக்கட்டான சூழ்நிலையை கருத்தில் கொண்டு நாடு மிக மோசமான வைரஸ் தாக்க நிலைக்கு செல்லாமல் இருக்க வேண்டுமானால் சுற்றுலாத்துறையினரை அனுமதிப்பதை தற்காலிகமாக நிறுத்துவதுடன் மாவட்டங்களுக்கிடையேயான போக்கு வரத்தில் ஓர் இறுக்கத்தை நடைமுறைப்படுத்தி செயற்பட்டால் ஒழிய இவ் வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாமல் மிகப்பெரும் மனிதப் பேரழிவை சந்திப்பது திண்ணம். அரசு உணர்ந்து செயற்பட தவறினால் உயிரிழப்புகளை கட்டுப்படுத்த முடியாமல் போகும். அரசு உணரத் தலைப்படுமா?

தமிழ் கிறுக்கன்



# பிராந்தியச் செய்திகள்



## சுகாதார சட்டங்களை மீறிய 30 க்கும் மேற்பட்ட தனியார் பஸ்களின் அனுமதி பத்திரங்கள் இரத்து

*சுகாதார சட்டங்களை மீறிய 30 க்கும் மேற்பட்ட தனியார் பஸ்களின் அனுமதிப் பத்திரங்களை அரசாங்கம் இரத்து செய்துள்ளது. கடந்த மூன்று வார காலப்பகுதியில் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச்சென்ற 30 பஸ்களின் அனுமதிப் பத்திரங்கள் இரத்து செய்யப் பட்டுள்ளன.*

*பஸ்களில் நிற்க சுகாதாரத் துறை அனுமதி வழங்கியதுடன் உடனடியாக பஸ் கட்டணங்கள் அவற்றின் முந்தைய நிலைகளுக்கு மீட்டமைக்கப்படும் என இராஜாங்க போக்குவரத்து அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், சுகாதார வழிமுறைகளை புறந்தள்ளி பஸ் சேவையினை முன்னெடுப்பதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.*



## காலியில் 7 கிராமங்களுக்கு பயணத்தடை விதிப்பு

காலி மாநகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 07 கிராம சேவகர் பிரிவுகளுக்கு பயணக்தடை விதிக்கப்பட்டுள்ளது.

1,768 பேருக்கு அண்மையில் பி.சீ.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது அதில் 20 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டதையடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் காலி - மிலித்துவ, கோங்கஹ, தெத்து கொட-வடக்கு, தெத்துகொட-தெற்கு, தலாப்பிட்டிய, தங் கெதர-மேற்கு மற்றும் மக்குலுவ போன்ற கிராம சேவகர் பிரிவுகளுக்கே இவ்வாறு நடமாட்டக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

## ரயில்வே திணைக்களம் விடுத்துள்ள முக்கிய அறிவித்தல்

இன்றும் நாளையும் சில புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரதான புகையிரதப் பாதை, கடலோர புகையிரதப் பாதை உள்ளிட்ட அனைத்து புகையிரதப் பாதைகளையும் உள்ளடக்கும் வகையில் புகையிரத போக்குவரத்து சேவைகள் இடம்பெறவுள்ளதாக ரயில்வே பொது மேலாளர் திலந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.


எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அனைத்து அலுவலக புகையிரதங்களையும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



## வவுனியாவை தாக்கத் தொடங்கியது கொரோனா : இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

யாழ் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற பி.சி.ஆர் பரிசோதனையில் வவுனியாவைச் சேர்ந்த தாயும் மகளுக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக வட மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரும் கடந்த 10 நாட்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து வந்தவர்கள் என்றும் இவர்களை அவர்களது இடமான சாளம்பைக்குளம் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இடம்பெற்ற பி.சி.ஆர் பரிசோதனையில் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை யாழ் மருதனார் மடப்பகுதியில் சந்தை வர்த்தகர் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக நடவடிக்கை எடுக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## கிழக்கு மாகணத்தில் முதலாவது கொரோனா மரணம் பதிவு..!

கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகிய முதலாவது கொரோனா தொற்றாளர் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்திய சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 80 வயதுடைய ஆணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதனை கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அ.லதாகரன் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

## தொடரும் விபத்துக்கள் - சமிஞ்சை விளக்குகளை பொருத்துமாறு மக்கள் கோரிக்கை!

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் ஒவ்வொரு நாளும் விபத்துக்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் குறித்த பகுதிக்கு சமிஞ்சை விளக்குகளை பொருத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த சுற்றுவட்டமானது வடமாகணம் மற்றும் தென் பகுதிகளில் இருந்து வருகை தரும் அனைத்து வாகனங்களும் சந்திக்கும் ஒரு முக்கிய பகுதியாக உள்ளது.

இதனால் அதிகமான வாகன நெரிசல் மிகுந்த பகுதியாக காணப்படுவதுடன் ஒவ்வொரு நாளும் விபத்துக்கள் இடம்பெற்றுவரும் நிலமை நீடித்து வருகின்றது.

கடந்த இரு தினங்களிற்கு முன்னரும் குறித்த பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ள நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான விபத்து சம்பவங்கள் தினமும் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு குறித்த பகுதியில் வீதி சமிஞ்சை விளக்குகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.






## நடிகருடன் காதல் திருமணம்?

நடிகை ரகுல் பிரீத் சிங், நடிகர் ஒருவரை காதலிப்பதாகவும் அவருடன் திருமண ஏற்பாடுகள் நடப்பதாகவும் கூறப்படும் நிலையில், அதுகுறித்து அவர் விளக்கம் அளித்துள்ளார்.



தமிழில் கார்த்தி ஜோடியாக தீரன் அதிகாரம் ஒன்று, தேவ், சூர்யாவுடன் என்.ஜி.கே ஆகிய படங்களில் நடித்து பிரபலமானவர் ரகுல் பிரீத் சிங்.

இவர் தற்போது கமலுடன் இந்தியன் 2,சிவகார்த்திகேயனுடன் அயலான் போன்ற படங்களில் நடித்து வருகிறார். போதைப் பொருள் வழக்கில் அவர் ஆஜராகி வாக்குமூலம் அளித்தது பரபரப்பானது.

இந்நிலையில் நடிகை ரகுல் பிரீத் சிங், நடிகர் ஒருவரை காதலிப்பதாகவும், அவருடன் திருமண ஏற்பாடுகள் நடப்பதாகவும் வலைத்தளத்தில் தகவல் பரவியது. இதற்கு பதிலளித்துள்ள ரகுல் பிரீத் சிங், 'நான் நடிகரை காதலிப்பதாக வெளியான தகவல் உண்மையில்லை. எனக்கு திருமண ஏற்பாடுகளும் நடக்கவில்லை. நான் இதுவரை யாரையும் காதலிக்கவில்லை.

தனியாகத் தான் இருக்கிறேன். எனக்கு எப்போது திருமணம் நடந்தாலும் அது பெரிய கொண்டாட்டமாக இருக்கும்' என்றார். மேலும் 'தமிழ், தெலுங்கு, இந்தியில் கைநிறைய படங்கள் வைத்து நடித்து வருகிறேன். இந்த படங்கள் அடுத்த வருடம் திரைக்கு வரும்' என்றார்.

## கூகுள் தேடலில் இரண்டாவது இடத்தை பிடித்த சூரரைப் போற்று



*சூர்யா நடிப்பில் வெளியான சூரரைப்போற்று திரைப்படம் கூகுள் தேடலில் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.*

*உலக அளவில் தேடல் இணையதளங்களில் மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் இணையதளம் கூகுள். இந்த தேடுதல் தளத்தை தான் இந்தியாவில் உள்ள மக்கள் மிக அதிகமாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.*

*2020ம் ஆண்டின் கடைசி மாதத்தில் நாம் இருக்கும் நிலையில் இந்த வருடம் இந்தியாவில் அதிகம் தேடப்பட்டவைகள் எவை என்பது குறித்த விவரத்தை கூகுள் வெளியிட்டுள்ளது.*

*திரைப்படம் சம்பந்தமான தேடல்களில் முதலிடத்தை ஹிந்திப் படமான 'தில் பேச்சரா' பெற்றுள்ளது. இரண்டாவது இடத்தை சூர்யா நடித்து வெளிவந்த 'சூரரைப் போற்று' படம் பிடித்துள்ளது. டாப் 10 பட்டியலில் இடம் பிடித்துள்ள படங்களில் ஒரே ஒரு தமிழ்ப் படம் இது தான் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று.*

## பிரபல சின்னத்திரை நடிகை 'சித்ரா' தூக்கிட்டுத் தற்கொலை!

பிரபல சின்னத்திரை நடிகை சித்ரா(29), சென்னையிலுள்ள தனியார் நட்சத்திர ஹோட்டலில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் பாண்டியன் ஸ்டோர் தொடரில் முல்லை என்ற கதாபாத்திரத்தில் நடித்து வந்தவர் சித்ரா.

இவருக்கென் தனி ரசிகர் வட்டம் உள்ளது. கடந்த ஒகஸ்ட் மாதம் அவருக்கு தொழிலதிபர் ஒருவருடன் நிச்சயதார்த்தம் நடந்தது. கொரோனா ஊரடங்கு முடிந்த பின் திருமணத் திகதியை முடிவு செய்யவிருந்தார்.

இந்நிலையில், தனியார் நட்சத்திர ஹோட்டலில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரது இந்த விபரீத முடிவு சின்னத்திரை நடிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



## தனிமைப்படுத்தப்பட்ட சனம் ஷெட்டி

பிக்பாஸ் நிகழ்ச்சியில் இருந்து கடந்த வாரம் வெளியேற்றப்பட்ட சனம் ஷெட்டி தற்போது தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழ் பிக்பாஸ் நிகழ்ச்சியின் 4-வது சீசன் தற்போது நடந்து வருகிறது. இதில் கடந்த வாரம் சனம் ஷெட்டி வெளியேற்றப்பட்டார். ரசிகர்களின் ஆதரவு இருந்தும் சனம் ஷெட்டி வெளியேற்றப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது. சனம் ஷெட்டி வெளியேற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து ரசிகர்கள் தொடர்ந்து சமூக வலைதளங்களில் பதிவிட்டு வந்தனர்.



இந்நிலையில், சனம் ஷெட்டி மீண்டும் பிக்பாஸ் வீட்டிற்குள் செல்ல உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஏனெனில், பிக்பாஸ் வீட்டில் இருந்து வெளியேறிய சனம் ஷெட்டி, இன்னும் தனது சொந்த வீட்டிற்கு செல்லவில்லையாம். அவர் ஓட்டலில் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆதலால், யாரும் எதிர்பாராத வகையில் சனம் ஷெட்டி விரைவில் மீண்டும் பிக்பாஸ் வீட்டுக்குள் வைல்ட் கார்ட் என்ட்ரியாக செல்ல வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த சீசனில் வனிதா வெளியேற்றப்பட்ட ஒரு சில தினங்களில் மீண்டும் வைல்ட் கார்ட் என்ட்ரியாக நுழைந்தார். அந்த வகையில் தற்போது சனம் ஷெட்டியும் மீண்டும் பிக்பாஸ் வீட்டுக்குள் செல்ல வாய்ப்புள்ளதாக தெரிகிறது.




## உலர் சருமத்தை சரிசெய்ய உதவும் அழகு குறிப்புகள் !!

எலுமிச்சை சாற்றில் தேன் கலந்து முகத்தில் பூசிக்கொண்டு, 15 நிமிடங்கள் கழித்து முகம் கழுவிக்கொள்ளவும். இதுவும் உலர் சருமத்தை குணமாக்குவதை உணரலாம்.



வெள்ளரிக்காயைச் சிறு துண்டுகளாக்கிக்கொண்டு, மிக்சியில் அரைத்துக்கொள்ளவும். அடுத்ததாக கொஞ்சம் ஆலோவேரா ஜெல் அல்லது யோகர்ட் வேண்டும். இதையும் நன்றாக கலந்து, முகத்தில் பூசிக்கொண்டு 15 நிமிடங்கள் கழித்து கழுவிக்கொள்ளவும்.

இரண்டு முட்டைகளை எடுத்து மஞ்சள் கருவை தனியே பிரிக்கவும். மஞ்சள் கருவை மட்டும் எடுத்து அதை கலந்து முகத்தில் பூசிக்கொள்ளவும். 10 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் முகம் கழுவிக்கொள்ளவும்.

ஸ்பூன் கொண்டு இரண்டு வாழைப்பழங்களை நன்றாக மசித்து, சிறிது தேங்காய் எண்ணெய் சேர்த்துமுகத்தில் பூசிக்கொண்டு 20 நிமிடங்கள் அப்படியே இருக்கவும். அதன் பிறகு குளிர்ந்த நீரால் முகம் கழுவிக்கொள்ளவும்.

5ஸ்பூன் தேன், 5ஸ்பூன் தூள் மற்றும் 2ஸ்பூன் மாவு கொண்டு சாக்லெட் பேக்கும் செய்து பயன்படுத்தலாம். இந்த கலவையை முகத்தில் பூசிக்கொண்டு 15 நிமிடங்கள் கழித்து முகம் கழுவிக்கொள்ளவும்.

உலர் சருமத்தில் இருந்து விடுபட இஞ்சியும் கைகொடுக்கும். நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் இஞ்சி சாறு எடுத்து, தேன் மற்றும் பன்னீர் கலந்து, விரல்களில் எடுத்து முகத்தில் பூசிக்கொள்ள வேண்டும். 15 நிமிடங்கள் கழித்து முகம் கழுவிக்கொள்ளவும்.






**ஒவ்வொருவர்**
**மனதிலும்**
**சொல்ல முடியாத**
**சோகங்களும்**
**நினைவுகளும்**
**உண்டு**
**யாரும் மறந்து**
**வாழவில்லை**
**மறைத்து தான்**
**வாழ்கிறோம்!!!**

## வேர்க்கடலையை தொடர்ந்து சாப்பிடுவதால் உண்டாகும் நன்மைகள் என்ன...?

வேர்க்கடலையில் புரதங்கள், எண்ணெய் மற்றும் நார்ச்சத்துகள் மிகுந்த அளவில் இருக்கிறது. வேர்க்கடலை நம் தோலை மென்மையாக வைத்திருப்பதுடன் காயங்களை குணப்படுத்தும் செயல்முறையிலும் உதவுகிறது.

வேர்க்கடலை எச்.டி.எல் அதிகரிக்கும் போது எல்.டி.எல்.ஐ குறைக்க உதவுகிறது. இது ஒரு நல்ல வகை கொழுப்பு வகையை சேர்ந்தது. வேர்க்கடலையை தொடர்ந்து சாப்பிடுவது, பித்த அமிலங்களின் உற்பத்தியில் குறுக்கீடு செய்வதன் காரணமாக பித்தப்பை கற்களை தடுக்க உதவும்.

வேர்க்கடலை சாப்பிட்டால் அதிலுள்ள உயிர் வேதிப் பொருள்கள் இப்படித் தேவையில்லாமல் ரத்தத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் பொருட்களை கல்லீரலுக்குள் தள்ளிவிட்டுவிடும். தேவையில்லாத அந்தப் பொருட்கள் கழிவாகி வெளியேறிவிடும்.

வேர்க்கடலை சாப்பிட்டால் நரம்பு மண்டலத்துடன் தொடர்புடைய நோய்கள் குறைந்து விடும். பார்க்கின்ஸன், அல்ஸமர் போன்ற ஞாபக மறதி நோய்கள் வராமல் தடுக்க வேர்க்கடலை உதவும். வேர்க்கடலையில் உள்ள உயிர் வேதிப் பொருள்கள் நரம்பு செல்களை நன்றாகச் செயல்படத் தூண்டிவிடுகின்றன. அதனால் நரம்புகள் நன்றாகச் செயல்படுகின்றன.

சுத்திகரிக்கப்பட்ட கடலைஎண்ணெய்யில் உடலுக்குக் கெடுதிதரும் கொழுப்பு இருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஏனென்றால் எந்தவொரு எண்ணெய்யையும் சுத்திகரிப்பதற்காக பலமுறை அதிக வெப்பத்தில் கொதிக்க வைக்கிறார்கள். இதனால் உடலுக்குத் தீங்கு செய்யும் கெட்ட கொழுப்புகள் அதில் உருவாகக் கூடிய வாய்ப்பு உள்ளது.

வேர்க்கடலையைப் பச்சையாகச் சாப்பிடுவதைவிட, வேர்க்கடலையை அவித்தோ, வறுத்தோ சாப்பிடலாம். ஆனால் வேர்க்கடலையை எண்ணெய்யில் போட்டு வறுத்துச் சாப்பிடக் கூடாது. வேர்க்கடலையின் தோலை நீக்காமல் சாப்பிட வேண்டும். ஏனென்றால் அதில் தான் நிறையச் சத்துகள் உள்ளன.

வேர்க்கடலையைச் சாப்பிடும்போது கசப்புச் சுவை வந்தால் அந்த வேர்க்கடலையைச் சாப்பிடக் கூடாது. கசப்பேறிய வேர்க்கடலையில் அஃப்லோடாக்ஸின் என்ற பொருள் இருக்கிறது. இது வயிற்றின் ஜீரணத்தைப் பாதிக்கக் கூடியது. எனவே புத்தம் புதிதான வேர்க்கடலையையே சாப்பிட வேண்டும்.



தொகுப்பு :- சப்தஹி

**06 ஆம் பக்க தொடர்ச்சி...**

**யாழ் கோட்டை முற்றுகை :-** 1990ம் ஆண்டு 2ம் கட்ட ஈழ யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து யாழ் கோட்டையை விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டு, அங்கு நிலைகொண்டிருந்த சிறிலங்கா படைவீரர்களைச் சரணடையும்படி கோரிக்கை விடுத்திருந்தார்கள். கோட்டையில் அடைபட்டிருந்த படைவீரர்கள் வான் வழியான விநியோகத்தை மாத்திரம் நம்பியிருந்த நிலை. ஒரு கட்டத்தில் கோட்டையை அண்டிய பகுதிகளில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை நிறுத்தி வான் வழியான விநியோகத்தையும் புலிகள் முற்றாக ஸ்தம்பிக்கச் செய்திருந்தார்கள்.

உணவு, மருந்து, வெடி பொருட்கள் இல்லாமல் மிகுந்த நெருக்கடியை கோட்டையில் இருந்த சிங்களப் படையினர் எதிர்கொண்டிருந்தார்கள். கோட்டை முற்றுகை இடம்பெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் புலிகளிடம் சரணடைந்த 900 சிறிலங்காப் பொலிசார் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட நிலையில், கோட்டையில் இருந்த படையினரைப் புலிகளிடம் சரணடையும்படியும் கூறமுடியாத சங்கடநிலை சிறிலங்காப் படைத் தலைமைக்கு. கோட்டையில் நிலைகொண்டிருந்த சிறிலங்காப் படையினரின் கதை அனேகமாக முடிந்துவிட்டதென்றே அனைவரும் எண்ணியிருந்தார்கள். அந்த நேரத்தில், கோட்டையில் முற்றுகைக்குள் சிக்கியிருந்த படையினரை மீட்கும் அதிரடி நடவடிக்கை ஒன்று கேணல் சரத் பொன்சேகா தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. அந்த நடவடிக்கைக்குப் பெயர் ஒப்பரேஷன் திரிவிட பலய (Operation Trivida Balaya). பலாலியில் இருந்து கடல் வழியாகப் புறப்பட்டு காரைநகரில் ஒரு தரையிறக்கத்தை மேற்கொண்டு, அதன் பின்னர் காரை நகரில் இருந்து மண்டைதீவு வழியாக குறுகலான பாலம், கடல் நீரேரி வழியாக யாழ் கோட்டையை அடைந்து, கோட்டையையும், அதனைச் சூழ உள்ள பகுதிகளையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அதன் பின்னர் கோட்டையில் இருந்த படை வீரர்களை வெளியேற்றுவது. இது தான் அந்த படை நடவடிக்கையின் நோக்கம்.

மிகவும் சவாலான, அதேவேளை ஆபத்தான திட்டம். கொஞ்சம் பிசகினாலும் ஆயிரத்திற்கும் அதிகமான இராணுவத்தினரையும், பெருமளவு ஆயுத தளபாடங்களையும் இழக்கவேண்டிய அபாயம் அந்தத் திட்டத்தின் பின்னணியில் இருந்தது. ஆனால், சரத் பொன்சேகாவின் தலைமையில் அந்த நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இதேபோன்று சரத் பொன்சேகா பங்குபற்றி தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்திற்கு விளைவித்த சேதங்கள் என்று, இலங்கைப் போரியல் வரலாற்றில் ஒரு பெரிய பட்டியலே இருக்கின்றது. காரணங்கள் பொதுவாகவே அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக முக்கியமான நடவடிக்கைகள் ஏதாவது மேற்கொள்ளவேண்டுமென்றால், அந்த நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்குவதற்கு சரத் பொன்சேகாவின் பெயரே சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் பிரேரிக்கப்படுவது வழக்கம். அதற்கு, இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது சரத் பொன்சேகா மிகவும் திறமையான இராணுவ அதிகாரி. நேர்மையானவர். இரண்டாவது காரணம்: சரத் பொன்சேகா தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை அடக்குவதில் மூர்க்கத்தனத்தை வெளிக்காண்பிப்பவர். விடுதலைப் புலிகளை, அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர். புலிகளின் அனுதாபிகள் விடயத்தில் எந்தவித இரக்கத்தையும் வெளிக்காண்பிக்காமல் எந்த எல்லைக்கும் சென்று புலிகளைத் தண்டிக்கும் குணம் படைத்தவர் சரத் பொன்சேகா. தமிழ் மக்கள் தொடர்பில் மிகுந்த வெறுப்பையும், தமிழ் மக்கள் உரிமை கேட்கத் தகுதியற்றவர்கள் என்கின்ற நிலைப்பாட்டையும் தனதாகக் கொண்டவர்தான் சரத் பொன்சேகா. எனவே, தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை அடக்குவது என்று வந்ததும், மிக மூர்க்கமாக, முரட்டுத்தனமாக தனது வீரத்தை வெளிப்படுத்தும் ஒரு குணத்தைக் கொண்டவர் சரத் பொன்சேகா. இதனால்தான், விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் என்றதும், "கூப்பிடு சரத் பொன்சேகாவை' என்று, சிறிலங்காவின் இராணுவ மற்றும் அரசியல் தலைமைகள் நிலைப்பாடு எடுத்துவிடும்.

**கரவெட்டி படுகொலைகள் :-** 1985ம் ஆண்டு மே மாதம் 9ம் திகதி யாழ் குடாவில் ஒரு சம்பவம் நடைபெற்றது. யாழ் கரவெட்டிப் பிரதேசத்தில் வீதி உலா சென்றுகொண்டிருந்த சிறிலங்கா இராணுவ அணி மீது விடுதலைப் போராளிகள் நடாத்திய தாக்குதலில் சிறிலங்கா இராணுவ அதிகாரியான மேஜர் சிறிமால் மெண்டிஸ் என்பவர் கொல்லப்பட்டார். இது யாழ் குடாவில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மத்தியில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது. இராணுவ முகாமை விட்டு வெளியே வருவதற்கு அவர்கள் தயங்கினார்கள். அந்த நேரத்தில், வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் சிங்க ரெஜிமெனட் படைப்பிரிவு நிலைகொண்டிருந்தது. அந்தப் படைப்பிரிவுக்குத் தலைமை தாங்கியவர் சரத் பொன்சேகா. அப்பொழுது அவர் மேஜர் தர அதிகாரியாகக் கடமையாற்றிக்கொண்டிருந்தார். மேஜர் தர அதிகாரியான சிறிமால் மெண்டிஸ் மீதான தாக்குதலால் யாழ் குடாவில் நிலைகொண்டிருந்த மற்றைய இராணுவ அதிகாரிகள் வெளியே நடமாட அச்சம் கொண்டிருந்த நிலையில், மேஜர் சரத் பொன்சேகா தனது படைப்பிரிவின் சிலரை அழைத்துக்கொண்டு துணிகரமாக வெளியே கிளம்பினர். உடுப்பிட்டி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை போன்ற பிரதேசங்கள் அடுத்தடுத்து பாரிய சுற்றிவளைப்பிற்கு உள்ளாகின. அந்தப் பிரதேசங்களை ஒவ்வொன்றாகச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் இளைஞர்கள், மாணவர்கள் என்று பலரைக் கைது செய்தார்கள். அப்படிக் கைது செய்யப்பட்ட சுமார் 75 தமிழர்கள் பல்வேறு இடங்களில் வைத்து அன்றைய தினம் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார்கள். சர்வதேச மன்னிப்புச் சபையின் கூற்றுப்படி, 1985ம் ஆண்டு மே மாதம் 9ம் திகதி சிறிலங்கா இராணுவம் வல்வெட்டித்துறையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட 40 தமிழர்கள், வல்வெட்டித்துறை வைத்தியசாலையை அண்டிய இரண்டு இடங்களில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். இதில் 12 இளைஞர்கள் தங்களுடைய கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் வரிசையில் நிற்கவைத்து தலைகளில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். மேலும் 25 தமிழர்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் சனசமூக வாசகசாலைக்குள் கொண்டு செல்லப்பட்டு, அங்கு அடைத்து வைக்கப்பட்ட நிலையில் குண்டு வீசப்பட்டு கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அதன் பின்னர் அந்த சனசமூக நிலையம் தீவைத்து எரியூட்டப்பட்டது. சிறிலங்கா இராணுவ மேஜர் மீதான தமிழ் போராளிகளின் தாக்குதலுக்குப் பழி தீர்க்கும் முகமாகவும், இராணுவ மேஜர் மீதான தாக்குதலால் சிங்களப் படைவீரர்கள் மனங்களில் ஏற்பட்டிருந்த அச்ச நிலையை நீக்கவும், தமிழ் மக்கள் மனங்களில் ஒரு உளவியல் பீதியை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் இந்தக் கோரமான படுகொலைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன. இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், இந்தப் படுகொலைகள் அந்த நேரத்தில் வல்வெட்டித்துறையில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தின் அதிகாரியாகக் கடமையாற்றிக்கொண்டிருந்த மேஜர் சரத் பொன்சேகாவின் நேரடி வழிநடத்தலில் நடைபெற்றது என்பதுதான். சிறிலங்காவின் இராணுவ அதிகாரியான சரத் பொன்சேகா என்பவர், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை அடக்குவதற்காக எந்த எல்லைக்கும் செல்லக்கூடிய ஒரு அதிகாரியாகவே சிறிலங்கா இராணுவத்தில் இருந்து வந்திருக்கின்றார். ஒரு இராணுவத் தந்திரோபாயம் என்று வருகின்ற பொழுது, அப்பாவிகள், பொது மக்கள் என்ற எந்தவித இரக்கமும் இல்லாமல் சிறிலங்கா இராணுவத்தின் நலன் - வெற்றி இவைகளை மாத்திரம் கவனத்தில் எடுத்து அவர் பயணித்த வரலாற்றைத்தான் பதிவுகளில் காணக்கூடியதாக இருக்கின்றது. சரத் பொன்சேகாவிடம் இயல்பாகவே காணப்பட்ட தமிழ் விரோத உணர்வு, விடுதலைப் போராட்டத்தை அடக்கும் மூர்க்கம் என்பன, முக்கியமான இராணுவ நடவடிக்கைகளை சரத் பொன்சேகா தலைமையிலேயே மேற்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை, சிங்களத் தலைமைகள் மத்தியில் ஏற்படுத்திவிட்டிருந்தது. சிறிலங்காவின் இராணுவத் தளபதியாகப் பதவியேற்றதும், ஈழ யுத்தத்தை தான் தன்னைத் தொடர்ந்து பதவிக்கு வரும் தளபதிக்கு ஒப்படைத்துச் செல்லமாட்டேன் என்று சூளுரைக்கும் அளவிற்கு, தமிழ் மக்களின் போராட்டத்தை அடக்குவதில் அதிக தீவிரம் வெளிப்படுத்தி, அதில் வெற்றியையும் கண்டிருந்தவர் சரத் பொன்சேகா. தமிழர்களை வெறுத்தார். தனது இராணுவ வரலாற்றில் சரத் பொன்சேகா என்கின்ற மனிதன் மிகவும் வெற்றிகரமான ஒரு இராணுவ அதிகாரியாக வலம் வந்ததற்கு அவரது திறமை, மூர்க்கம், கட்டுப்பாடு, நேர்மை என்பன காரணங்களாகக் கூறப்பட்டாலும், தமிழ் மக்களை அவர் மிக மோசமாக வெறுத்ததுதான் தமிழர் போராட்டத்தினை அவர் வெற்றி கொள்வதற்கு பிரதான காரணமாக இருந்தது என்று சில ஆய்வாளர்கள் அபிப்பிராயம் வெளியிட்டு வருகின்றார்கள். சரத் பொன்சேகா என்கின்ற இராணுவ அதிகாரி தமிழர்களை மிக அதிகம் அதிகமாக வெறுத்தார். விடுதலைப் புலிகளுக்கு எதிராக சரத் பொன்சேகாவின் வெற்றிக்குப் பின்னணியாக இருந்த காரணம் பற்றி ஒரு சந்தர்ப்பத்தில் தென் இலங்கை ஊடகம் ஒன்று கேள்வி ஒன்றினை சரத் பொன்சேகாவிடம் எழுப்பியிருந்தது. அதற்குப் பதிலளித்த சரத் பொன்சேகா, தான் சிறுவயதில் தனது பெற்றோருடன் அம்பாறை மாவட்டத்தில் வசித்த பொழுது, அங்கு தமிழர்களால் தனது பெற்றோர் பாதிக்கப்பட்டதாகவும், அந்தப் பாதிப்பே தான் தமிழர்களை வெறுக்கக் காரணமாக இருந்ததாகவும், தனது அந்த வெறுப்பினை தமிழர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு எதிராக முழு அளவில் தான் பிரயோகித்ததாகவும், புலிகளுக்கு எதிரான தனது வெற்றிக்கு இதுவும் ஒரு காரணம் என்றும் கூறியிருந்தார். அதுமட்டுமல்ல, விடுதலை வேண்டிப் போராடும் அருகதை தமிழ் மக்களுக்குக் கிடையாது என்கின்ற நிலைப்பாட்டையும் தனதாகக் கொண்ட ஒருவராகத்தான் அவர் சிங்களப் படையினர் மத்தியில் இருந்து வந்திருக்கின்றார்.

2008ம் ஆண்டின் நடுப்பகுதியில் சிறிலங்காவின் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா படையினர் மத்தியில் ஆற்றியிருந்த உரை ஒன்று, அந்த நேரத்தில் தமிழர்கள் மத்தியில் மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. 'இந்த நாடு சிங்களவர்களுக்கே உரியது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனாலும் இங்கு சிறுபான்மையினரும் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களை நாம் எமது மக்களாகவே பார்க்கின்றோம். இந்த நாட்டில் 75வீதத்திற்கும் அதிகமாக இருக்கும் சிங்களவர்களாகிய எமக்கு எமது தேசத்தைக் காப்பாற்றும் பொறுப்பு இருக்கின்றது. நாங்கள் ஒருபலமான இனம். எங்களுடன் சிறுபான்மையினத்தினர் சேர்ந்து வாழ முடியும். ஆனால் எங்களை அவர்கள் அடக்கி ஆழ நினைப்பதை எங்களால் அனுமதிக்க முடியாது' இவ்வாறு சரத் பொன்சேகா உரை நிகழ்த்தியிருந்தார். இதே கருத்தினை 2008ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23ம் திகதி வெளியான கனடாவின் நஷனல் போஸ்ட் பத்திரிகைக்கு (National Post Newspaper of Canada) அவர் வழங்கியிருந்த செவ்வியிலும் தெரிவித்திருந்தார். 2009ம் வருட இறுதியில் அமெரிக்கா வந்திருந்த சரத் பொன்சேகா, அங்கு சிங்களப் புத்திஜீவிகள் மத்தியில் உரைநிகழ்த்தும் பொழுதும், இதே பொருள்படக் கருத்து வெளியிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

2008ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இலங்கையில் ஒரு யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியும் மற்றைய தமிழ்நாட்டுத் தலைவர்களும் முன்வைத்திருந்தது சம்பந்தமாக 21.12.2008 அன்று கொழும்பில் இருந்து வெளியான சண்டே ஒப்சேவர் (Sunday Observer) பத்திரிகைக்குச் செவ்வி வழங்கியிருந்த சரத் பொன்சேகா தமிழ் நாட்டுத் தலைவர்கள் வெறும் அரசியல் கோமாளிகள் என்று குறிப்பிட்டிருந்தார். இவை எல்லாமே தமிழர்களை, தமிழர் சார்ந்த அமைப்புக்களை, தமிழ் தலைமைகளை சரத் பொன்சேகா ஒரு தாழ்ந்த நிலையில், வெறுப்புடன் கூடிய மனப்பாண்மையுடன், நோக்கி வந்தார் அல்லது அபிப்பிராயம் கொண்டிருந்தார் என்கின்ற யதார்த்தத்தையே விளக்கி நிற்கின்றது.

**ஈழத் தமிழர்களின் கதாநாயகன்?**

கடந்த 21.05.2012 அன்று சரத்பொன்சேகா சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சரத் பொன்சேகாவிற்கு ஒரு கதாநாயகன் அந்தஸ்து வழங்கப்பட்டு தமிழ் ஊடகங்களில் வெளியாகி வருகின்ற செய்திகளைப் பார்த்தபோதுதான் சரத் பொன்சேகா பற்றிய ஒரு பார்வையை ஈழத்தமிழரின் கோணத்தில் இருந்து நாம் பார்த்தாகவேண்டிய தேவையை நான் உணர்ந்தேன்.

தமிழ் தேசியம் பற்றிய தெளிவான பார்வையைக் கொண்டவரும், இலங்கையில் தற்பொழுது வசித்து வருபவருமான எனது நண்பர் ஒருவர் தனது Face Book இல் சரத் பொன்சேகாவின் விடுதலை பற்றிய செய்தியை தனது status ஆகப் பதிவுசெய்துவைத்திருப்பதைப் பார்த்ததும், ஈழத் தமிழர் விடயத்தில் சரத் பொன்சேகா என்ற நபரின் வகிபாகம் பற்றிய ஒரு பதிவை மேற்கொண்டேயாகவேண்டிய அவசியத்தை உணர்ந்தேன். ஈழத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் பற்றி சரத் பொன்சேகாவிடமும் பேசுங்கள் என்று சில புலம்பெயர் அமைப்புக்களின் தலைமைகளிடம் சில மேற்குலக இராஜதந்திரிகள் ஆலோசனை வழங்கி யதாக அறிந்தபொழுது, ஒரு தமிழ் ஊடகவியலாளனாக எனது பார்வையை வெளிப்படுத்தியேயாக வேண்டிய கடமையை உணர்ந்தேன். இலங்கையின் அரசியலில் இன்று தவிர்க்க முடியாதவராகிவிட்டுள்ள சரத் பொன்சேகா பற்றிப் பிரஸ்தாபிப்பதோ, அவருடன் அரசி யல் இராஜதந்திரத் தொடர்புகளைப் பேணுவதோ தவறு என்று நான் இங்கு கூறவரவில்லை. சரத் பொன்சேகாவுடன் நாம் தாராளமாக அரசியல் பேசலாம். அவர் மீதான பழிவாங்கல்களுக்காக நாம் பச்சாத்தாபப்படலாம். அவரைப் பற்றி செய்திகளையும், கட்டுரைகளையும் தாராளமாக எழுதலாம். அவர் ஜனாதிபதித் தேர்தலில் நின்றால் அவருக்கு நாம் வாக்கும் அளிக்கலாம். இவைகளெல்லாம் தவறல்ல.

ஆனால் ஒரு முக்கிய விடயத்தை எமது மனங்களில் ஆழப் பதித்துக்கொண்டு இவைகளை மேற்கொள்ளுவதுதான் நல்லது. ஈழத் தமிழர்களையும், அவர்களின் அரசியல் உரிமைகளையும், அந்த உரிமைகளை அடைவதற்கான ஈழத்தமிழர்களின் நியாயமான போராட்டங்களையும் மிக மோசமாக வெறுக்கின்ற ஒரு சிங்களத் தலைவரே சரத் பொன்சேகா என்பதை கருத்தில் வைத்துக்கொண்டு சரத் பொன்சேகா சம்பந்தமான அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளுவதே சாலச் சிறந்தது என்பதுதான் எனது தாழ்மையான அபிப்பிராயம்.

சரத் பொன்சேகா என்கின்ற நபர் சிங்களவர்களின் ஒரு மீட்பராக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் நிச்சயமாக அவர் ஈழத் தமிழர்களின் ஒரு கதாநாயகன் அல்ல. நவீனகாலத் துட்டகெமுனுக்களாகத் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டுள்ள மகிந்த மற்று கோத்தபாயக் கூட்டணிக்கு நிகராக ஈழத் தமிழருக்கு கேடுவிளைவித்த ஒரு சிங்கள அரசியல்வாதியே சரத் பொன்சேகா.

# ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள்




### அறிமுகம்

"லக்ஷியம்" என்னும் வட சொல்லிலிருந்து இலக்கியமும் "லக்ஷிணம்" என்னும் வடசொல்லிலிருந்து இலக்கணமும் தமிழில் தோற்றம் பெற்றன, என்பர். "லக்ஷியம்" என்னும் வடசொல் தமிழில் "இலட்சியம்" ஆகி "இலக்கியம்" ஆயிற்று. இலட்சியம் என்பது குறிக்கோளை அடைவதைக் குறிக்கும். "லக்ஷியம்" என்னும் சொல்லிலிருந்து வந்த இலக்கியம் என்னும் சொல்லும் அவ்வாறே தமிழிலும் இலட்சியம் அல்லது இலக்கு என்னும் பொருளையே குறிக்கும். இலக்கியம் இலக்கு + இயம் எனப் பிரிந்தால் இலக்கு என்பது நோக்கம், கொள்கை, குறிக்கோள் எனப் பொருள்படும். இயம் என்பது இயம்புவது, கூறுவது, அடைதல் எனப் பொருள்படும். எனவே, இலக்கியம் என்பது இலக்கை அடைதல் ஆகும்.

"சமுதாயத்தைச் சொல்லில் வடிப்பது இலக்கியம்" எனக் கூறினார், டி.பொனால்ட். இலக்கியம் என்பது காலக்கண்ணாடி எனக் கூறப்படுவதுண்டு. சமூகத்தின் பிரச்சினைகள் - தேவைகள், வாழ்வியல் அம்சங்கள், அரசியல் - பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், பண்பாட்டுப் பிறழ்வுகள் முதலியவற்றை இலக்கியம் பிரதிபலிக்கின்றது. "இலக்கியப்படைப்பில் இரு நிலைகள் உள்ளன. அவை : நினைவு, நினைவிலி" என்பது லூயிஸ் என்பாரது கருத்து. சங்ககாலம் தொடக்கம் இன்று வரை இலக்கியமானது மக்களின் வாழ்வியல் அம்சங்களையும் பிரச்சினைகளையும் கூறி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. மக்களின் வாழ்வியல் அம்சங்களையும் பிரச்சினைகளையும் உணர்ச்சிகளையும் பிறருக்குத் தெளிவாகக் கூறுகின்ற ஒரு கருவியாக மொழி உள்ளது. அம்மொழியைப் பேசுகின்ற மக்களது கொள்கைகளையும் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் எடுத்தியம்புவது இலக்கியமாகும். "அன்றாட வாழ்வு, அறிவியல் துறைகளில் வழங்கும் மொழி வழக்குகளில் அமைந்துள்ள வேறுபாட்டை இலக்கியம் காணவேண்டும் என பேச்சு வழக்கிற்கும் இலக்கிய வழக்கிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை தாமஸ் ஆராய்ந்தார்".

நாம் தமிழில் இலக்கியம் என்றதும் இராமாயணம், மகாபாரதம் முதலியவற்றையே கருதுகின்றோம். ஆனால், அது முற்றுமுழுதான உண்மையல்ல. அவை இலக்கிய நூல்களில் சிலவே ஆகும். வாழ்வின் பல்வேறு அம்சங்களைத் தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன. "இனம், வாழ்வுச் சூழல், வேளை என்ற மூன்று நிலைகள் இலக்கியத்தில் உள்ளன" என்கிறார், டேய்ன். பழைய இலக்கியம் பண்டைத் தமிழரின் வாழ்வியல் பிரச்சினைகள் - அம்சங்கள் முதலியவற்றை திணைக்கோட்பாட்டின் ஊடாகச் செய்யுள் வடிவில் கூறியது. இன்றைய தமிழரின் வாழ்வியல் பிரச்சினைகளை உரைநடையின் ஊடாக நவீன இலக்கியம் கூறுகின்றது. "மதம், கல்வி, குடும்பம், சாதி, அரசியல் கட்சிகள், சட்டம், மக்கள் தொடர்புச் சாதனங்கள் முதலிய பல்வேறு கருத்தியல்கள் போன்றே கலை, இலக்கியங்களுமாகும். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்களில் இயல் என்பது இலக்கியமாகும். கலை நயத்துடன் ஏதேனும் ஒரு வடிவத்தில் ஏதேனும் ஒரு சமூகத்தின் வாழ்வியல் பிரச்சினைகள் அம்சங்களை அல்லது ஏதேனும் ஒரு விடயத்தை ஏதேனும் ஒரு மொழியினூடாக வெளிப்படுத்துவது படைப்பு இலக்கியம் ஆகும். இலக்கியமும் மொழியியலும் இரு வித்தியாசமான துறைகளாக இருப்பினும் ஒன்றையொன்று தழுவியே வளரவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு.

கலைநயம் தோன்ற ஏதேனும் வடிவத்தில் எழுதப்படும் இலக்கியத்தினை இரு வகைப்படுத்தலாம். ஒன்று, இலக்கியம் காலக்கண்ணாடி என்பதாகும். இதனை முதன் முதலில் வலியுறுத்தியவர் லூயிடி பொனால்ட் *(1754-1840)* என்ற பிரஞ்சுத்தத்துவவியல்வாதியாவார். இவரும் இவர் சார்ந்தவர்களும் இலக்கியம் தனிமனிதர் சிலரால் படைக்கப்படுவதாயினும் படைக்கப்பட்டபின் அதுதனிமனிதனுக்குச் சொந்தமானது இல்லை என்ற கருத்தை உடையவர்கள். இரண்டு, இலக்கியம் இலக்கிய கர்த்தாவின் சூழல் சம்பந்தமானது ஆகும். எழுத்தாளனது வாசகர் தொகை, நூல் உற்பத்திச் செலவு, நூல் சந்தையின் இயல்பு, மத்தியதர வர்க்க வாசகர்களின் இயல்பு, எழுத்தாளனது வர்க்கச் சார்பு இவை போன்றன ஒரு படைப்பின் உள்ளடக்கம், உருவம் என்பவற்றைப் பெரிதும் பாதித்தன. இவ்விரண்டு நோக்குகளும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவை.

மனித இனம் என்று சிந்திக்கத் தொடங்கியதோ அன்றே படைப்பிலக்கியம் தோன்றி விட்டது. ஓவியம், இசை, நடனம் என்பவற்றைப்போல இசையில் நாம் இலக்கியத்தில் பெறுவது போன்று அர்த்தத்தைப் பெற முடியாது. போரினால் பாதிக்கப்பட்ட குடும்பம் பற்றிய சிறுகதை அல்லது நாவல் தருகின்ற வாழ்வியல்பிரச்சினைகள் அம்சங்களை சித்திரிக்க முடியாது. படைப்பிலக்கியத்திற்கு மொழி முக்கியமானதொன்றாகும். படைப்பிலக்கியம் (Creative Literature) என்பது பிறவற்றைப் பார்த்துப் படியெடுக்கப்படாத, பார்த்து எழுதப்படாத இலக்கிய வகைகள் எல்லாம் படைப்பு இலக்கியங்களே. மனிதனின் மனத்தினுள் ஓடி மாற்றம் பெறுகின்ற எல்லாமே படைப்பு இலக்கியமாகும்.

தனிநிலைச் செய்யுள்கள், தொடர்நிலைச்செய்யுள்கள், காப்பியங்கள், உரைநடைகள் எனச் சங்ககாலம் தொடக்கம் தமிழ் இலக்கியங்கள் வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. உரைநடையின் பின்னர் கவிதையைத் தவிர ஏனைய இலக்கியங்கள் எல்லாமே உரைநடையில் எழுதப்பட்டன. கவிதை மட்டும் செய்யுளும் உரைநடையும் கலந்து எழுதப்பட்டது. நவீன இலக்கிய உலகில் சிலர் செய்யுள் வடிவில் மட்டும், சிலர் உரைநடையில் மட்டும், சிலர் இரண்டும் கலந்து கவிதை படைக்கின்றார்கள். எப்படி கவிதை படைக்கப்பட்டாலும் அது ஏனைய படைப்பிலக்கியங்களில் இருந்து வேறுபட்டது. ஏனெனில், அனுபவத்தையே கவிதை உணர்த்த, அனுபவத்தில் விளைந்த கருத்தை விளக்குவதாக கட்டுரையும் அனுபவத்தை நிகழச் செய்வதாக புனைகதையும் உள்ளன. வாழ்வின் இரு பக்கங்கள் இன்பமும் துன்பமும் ஆகும். இன்பத்தை இலக்கியம் கூறினால், அது வாழ்வியல். அதுவே துன்பத்தைக் கூறினால், அது வாழ்வியல் பிரச்சினையாகும். எனவே, நல்லதொரு இலக்கியம் இன்பம், துன்பம் ஆகிய இரண்டையும் கூறவேண்டும்.

இலக்கியம் பற்றி மேலும் சில அறிஞர்கள் கூறிய கருத்துக்களைச் சுருக்கமாக நோக்கின். "அழகு, கவிதை, கற்பனை, குறிக்கோள் முதலியவற்றை எங்ஙனம் துல்லியமாக விளக்கிக் கூற இயலாதோ அவ்வாறே இலக்கியத்தை விளக்கிக் கூற இயலாது" என சி.டி. வின்செஸ்ரர் (C.T.Winechester) கூறுவார். "இலக்கியமாவது சிறந்த கருத்துக்கள் அடங்கிய நூலாகும்" என்பார், மெர்சன். (Emerson). பொதுவாக மக்களைக் கவரும் முறையில் அமைந்து, வடிவம் இன்றியமையாததாகி, அதன் வாயிலாக இன்பம் நல்குவது இலக்கியமாகும்" என அட்சன் கூறுவார்.

எனவே, கூட்டு வாழ்க்கையும் கூட்டாகஉணவுதேடலும், கூட்டாக உண்ணுதலும் ஏற்பட்ட சூழலில் கலைகள்தோன்றின. அக்கலைகள் பிற்காலத்தில் கொள்கை ரீதியாக பல மாற்றங்களுக்கு உள்ளாகின. கலைகளுள் அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் உள்ளது இலக்கியமே ஆகும். இலக்கியம் ஒரு வாழ்வின் ஒழுங்கான பாதை. அதில் ஒவ்வொரு படைப்பாளியும் ஒவ்வொரு மைல் கல். பொதுவாக இலக்கியம் என்பது மக்கள் வாழ்வியலைப் பிரதிபலிப்பது அல்லது மக்கள் வாழ்வியல் பிரச்சினைகளை அம்சங்களை விமர்சிப்பது அல்லது மக்கள் வாழ்வியலைப் பயன்படுத்துவது எனக் கூறலாம்.

### வாழ்வியல்

வாழ்வியல் என்ற பதத்தை வாழ்வு + இயல் எனப் பிரித்து நோக்கலாம். 'மதுரைத்தமிழ்ப் பேரகராதி' வாழ்வு என்பதற்கு முறைமை, வாழ்தல், வாழ்க்கை, நல்வாழ்க்கை, சீவனம், உறைவிடம், வாழ் எனவும் இயல் என்பதற்கு சாயல், ஒழுங்கு, நடை, தகுதி, ஒழுக்கம், குணம், இயற்கை, செலவு, பகுதி எனவும் பல கருத்துக்களைக் கூறும். ஆகவே, வாழ்க்கையின் அம்சங்கள், அல்லது கூறுகள், அல்லது நடைமுறைகள் அல்லது ஒழுங்குகள் அல்லது பகுதிகள் பற்றி ஆராய்வது வாழ்வியலாகும்.


"கலை, இலக்கியம் தொடர்பானவற்றில் வரும் போது, மனித வாழ்வைச் சார்ந்தது, பண்பாடு சிந்தனை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட இலக்கியம், தத்துவம், வரலாறு முதலிய துறைகளைக் குறிக்கும் பொதுப் பெயர்" என வாழ்வியல் என்ற சொல்லுக்கு 'க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி' விளக்கம் கூறும்.

தமிழ் இலக்கிய உலகில் காலத்துக்குக் காலம் பல்வேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது தமிழ் மொழியின் துரித வளர்ச்சிகளையும் அது செம்மொழியாக மாறியதையும் எடுத்துக்காட்டுவதோடு, தமிழ் மொழியின் தற்காலத்தேவைகளுள் முக்கியமானதொன்றாகவும் உள்ளது. வாழ்வியல் என்ற சொல்லும் தமிழுக்குப் புதியதே. வாழ்வியல் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்து இனத்தின் அல்லது சமூகத்தின் வாழ்க்கைக் கூறுகளை விளக்கிக் கூறுவதாகும். வாழ்வியல் என்பது மக்களுடைய அன்றாட வாழ்க்கை முறைகளுடனும் வாழ்க்கை நிகழ்வுகளுடனும் தொடர்புடையது எனப் பொதுவாகக் குறிப்பிடலாம்.

பாதுகாப்பு பண்பாட்டு மரபு, சுகாதாரம், உணவு, உடை, பாலியல், சடங்குகள், கொண்டாட்டங்கள், விளையாட்டுக்கள், பொழுது போக்குகள், பொருளாதாரம், அரசியல், நித்திரை, துயிலெழுதல், சூழமைவு, குளித்தல், வரலாறு, தொழில்வகை, உறைவிடம், பிறப்பு, இறப்பு, நிறுவனம், அணிகலன்கள், உளவியல், உறவு முறைகள், நம்பிக்கைகள், குழந்தை வளர்ப்பு, நீராடுதல், மொழியியல், நாட்டுப்புறவியல், இனப்பெருக்கம், குடிப்பெயர்வுகள், போக்குவரத்து முதலியன வாழ்வியல் அம்சங்கள் ஆகும். மக்களது இன, மத, மொழி, பண்பாடு, கலை, கலாசாரம் என்பவற்றிற்கு ஏற்ப வாழ்வியலானது வேறுபட்டுக் காணப்படும்.

**தொடரும்...**

**புயல் சிறீகந்தநேசன் – தலைவர், புதுமை எழுத்தாளர் ஒன்றியம்**




## தொலைபேசி மூலம் கொரோனாத் தொற்றுப் பரிசோதனை!

கொரோனாத் தொற்று பரிசோதனையை தொலைபேசி மூலம் 30 நிமிடங்களில் மேற்கொள்வதற்கான தொழிநுட்பத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

தற்போது நோய் எதிர்பொருள் துரித பரிசோதனைக் கருவியும், அந்நோய்த்தொற்று பாதிப்பை உறுதி செய்வதற்கு ஆர்டி-பிசிஆர் பரிசோதனைக் கருவியும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கிரிஸ்பர் தொழிநுட்ப அடிப்படையில் உருவாக்கப்பட்ட இக்கருவியில் கொரோனா வைரசின் ஆர்என்ஏ ஏற்கெனவே உள்ளீடு செய்யப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் குறிப்பிட்ட நபரிடமிருந்து பெறப்பட்ட மாதிரியானது, தொலைபேசியில் இணைக்கப்படும் கருவியின் மூலமாகப் பரிசோதனை செய்யப்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த மாதிரியில் கொரோனா இருப்பதற்கேற்ப அதன் ஒளிரும் தன்மையை தொலைபேசி கெமரா மூலமாகக் கண்டறியலாம் என்றும் கொரோனா பாதிப்பு அதிகமாக இருந்தால், மாதிரி அதிகமாக ஒளிரும் என்றும் தெரிவித்துள்ளனர்.



## இலங்கையில் Infinix Hot 9 Play அறிமுகம்

இன்றைய இளம் தலைமுறையினருக்காக வடிவமைக்கப்பட்ட பிரீமியம் ஒன்லைனில் இயக்கப்படும் ஸ்மார்ட்போன் வர்த்தக நாமமான Infinix அதன் புதிய ஸ்மார்ட்போன் மொடலான Hot 9 Play வெளியிட்டுள்ளது. இந்த மொடல் நேர்த்தியானது. ஸ்டைலானது. மேலும் உயர் செயல்திறன் கொண்ட இன்னும் மலிவு மற்றும் அழகாக மகிழ்வளிக்கும் மாற்றீட்டைத் தேடும் மத்திய சந்தை பிரிவை இலக்காகக் கொண்டுள்ளது.



2013 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இளம் தலைமுறையினரை குறிவைத்து. Infinix மொபைல் ஒரு பிரீமியம் ஒன்லைனில் இயங்கும் ஸ்மார்ட்போன் வர்த்தக நாமமாகும் . Infinix மிகவும் அதிநவீன தொழில்நுட்பங்கள், மற்றும் ஸ்டைலான வடிவமைப்புகளை வழங்குவதில் உறுதியாக உள்ளது. நுகர்வோரை போக்கு மற்றும் புதுப்பித்த நிலையில் வைத்திருக்கிறது.

Zero, Note, Hot, S, மற்றும் Smart என 5 வகைகளில் Infinix கிடைப்பதுடன் ,ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கு, தென்கிழக்கு ஆசியா மற்றும் தெற்காசியாவை உள்ளடக்கிய உலகெங்கிலும் 30 க்கும் மேற்பட்ட நாடுகளில் Infinix உள்ளது.

இதற்கமைய எதிர்வரும் நாட்களில் Infinix இலங்கையில் தமது உற்பத்திகளை அறிமுகம் செய்யவுள்ளது. இந்த தொலைபேசிகளின் வெளியீடு இலங்கையில் உயர் செயல்திறன் கொண்ட தொலைபேசி பிரிவில் ஒரு இடையூறு உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது மாறுபட்ட வாழ்க்கை முறைகள், தேவைகள் மற்றும் அழகியலை பூர்த்தி செய்யும் பலவிதமான மொடல்களை வழங்கவுள்ளது .

மேலும் Hot 9 Play என்பது புதிய தலைமுறையின் தொலைபேசி. இது நேர்த்தியானது. ஈடுபாட்டுடன் மற்றும் திறமையானது. 8.9mm தடிப்புக் கொண்ட சூப்பர் மெலிதான வெளிப்புறத்துடன், தொலைபேசியை எங்கும் எளிதாக எடுத்துச் செல்ல முடியும். மற்றொரு சுவாரஸ்யமான அம்சம் 6.82" HD+ cinematic display என பல சிறப்பம்சங்களையும் இது உள்ளடக்கியுள்ளது .

## பெட்டி போன்ற அலுவலகங்கள்! விரைவில் அமேஸான் மூலம் விற்பனை

அதிகரித்து வரும் தேவை மற்றும் இடப்பற்றாக்குறைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் மற்றும் வீடுகள் விரைவில் அமேஸானில் விற்பனைக்கு வரவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எஸ்டோனியாவைச் சேர்ந்த OOD என்ற நிறுவனம், சிறிய பெட்டி போன்ற அலுவலகத்தை தயார் செய்து வருகின்றன.

97 சதுர அடி கொண்ட அலுவலகங்கள் மற்றும் வீடுகள் இருவருக்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இதற்கு ஆதரவு அதிகரித்து வருவதால் ஒன்லைன் நிறுவனமான அமேஸானில் விற்பனைக்கு வரவுள்ளது.





## 2021ல் அறிமுகமாகும் புதியவகைக் கார்..!

இடையில் சார்ஜ் ஏற்ற அவசியமின்றி 1600 கிலோ மீற்றர் தூரத்துக்கு ஓடும் புதிய வகை காரை அமெரிக்காவை சேர்ந்த ஆப்டெரா இ.வி. (Aptera EV) நிறுவனம் அடுத்த ஆண்டு அறிமுகம் செய்யவிருப்பதாக தெரிவித்துள்ளது.

ஏர் பிளைன் வடிவம் கொண்ட கார் லைட்வெயிட் ரகத்தை சேர்ந்தது எனவும், சோலார் பவர் மூலம் நாளொன்றுக்கு 64 கிலோ மீற்றர் வரை சார்ஜ் ஏறும் வசதி உடையது எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

காரிலிருக்கும் 100 கிலோ வாட் பேட்டரி மூலம் 1,600 கிலோ மீற்றருக்கு செல்லலாம் எனக் குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.






## இத்தாலியின் காற்பந்து ஜாம்பவான் ‘போலோ ரோஸி‘ மரணம்!

மரடோனாவை தொடர்ந்து இத்தாலியின் காற்பந்து ஜாம்பவான் போலோ ரோஸ்ஸி (Paolo Rossi) மரணமடைந்துள்ளது காற்பந்து உலகை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. கடந்த 1982 ஆம் ஆண்டு ஸ்பெயினில் நடந்த உலகக் கோப்பை தொடரில் இத்தாலி சம்பியன் ஆனது.

லீக் ஆட்டங்களில் அனைத்து போட்டிகளிலும் சமன் கண்டு, தடுமாறியபடி நோக்அவுட் சுற்றுக்குள் நுழைந்த இத்தாலி அணி இரண்டாவது சுற்றிலிருந்து விஸ்பரூபம் எடுத்தது.

அதற்கு, முக்கிய காரணமாக இருந்தவர் தான் இந்த ரோஸ்ஸி. இத் தொடரில், 6 கோல்கள் அடித்து தங்கக்காலணி விருதையும் தொடரின் சிறந்த வீரருக்கான தங்கப்பந்து விருதையும் அவர் தட்டி சென்றார்.

நாக் அவுட் சுற்றில் பிரேசில் அணிக்கு எதிராக ரோஸ்ஸி அடித்த ஹட்ரிக் கோல்கள்' காற்பந்து ரசிகர்களை பிரமிக்க வைத்த ரகத்தை சேர்ந்தவை. அரையிறுதியில் போலந்து அணிக்கு எதிராக இரண்டு கோல்களையும் ரோஸ்ஸி அடித்தார். இறுதி போட்டியில் ஜேர்மனிக்கு எதிராக 1 கோலையும் ரோஸ்ஸி அடித்து இத்தாலி அணியை சம்பியனாக்கி அழகு பார்த்தார் ரோஸி.

போலோ ரோஸ்ஸியின் தனிப்பட்ட திறமை காரணமாகவே இத் தொடரில் இத்தாலி அணி கோப்பையை வென்றது என்றே சொல்லலாம். இந்த ஆண்டின் மிகச் சிறந்த ஐரோப்பிய காற்பந்து வீரருக்கான பல்லான் டி ஓர் விருதையும் ரோஸி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாலி அணிக்காக 48 சர்வதேச ஆட்டங்களில் விளையாடியுள்ள ரோஸ்ஸி 20 கோல்களை அடித்துள்ளார்.புகழ் பெற்ற யுவென்டஸ் மற்றும் ஏ.சி. மிலன் அணிகளுக்காகவும் விளையாடியுள்ள ரோஸ்ஸி 1987 - ஆம் ஆண்டு காற்பந்திலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்வுக்குப் பின்னர் தொலைக்காட்சிகளில் தொகுப்பாளராக பணி புரிந்து வந்தார். தற்போது, 64 வயதான அவர் இத்தாலியின் rai sport தொலைக்காட்சியில் பணி புரிந்தார். நீண்ட காலமாக நோயுற்று இருந்த ரோஸ்ஸி மரணமடைந்து விட்டதாக அவரின் மனைவி தெரிவித்துள்ளார்.



## உலக குதிரைப்பந்தய சம்பியன்ஷிப் போட்டி

ஹொங்கொங்கில் நடைபெற்ற உலக குதிரைப் பந்தய சம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் பெண் என்ற பெருமையை பிரித்தானியாவைச் சேர்ந்த ஹொலி டொயில் (Hollie-Doyle) பெற்றுள்ளார்.

உலகம் முழுவதும் இருந்து 12 குதிரையேற்ற வீரர்கள் பங்கேற்ற இந்த பந்தயத்தின் 4வது மற்றும் கடைசி சுற்று போட்டி நடைபெற்றது.

இதில் சக நாட்டு வீரராக ரையன் மூர்-ஐ பின்னுக்குத் தள்ளி வெற்றி பெற்ற 24 வயதான ஹொலி டொயில் ஒட்டுமொத்த சம்பியன் தரவரிசையிலும் 3வது இடத்தை கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.



## LPL தொடரில் அரையிறுதிக்குள் 4 அணிகள் நுழைவு

கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமான லங்கா பிரிமியர் லீக் போட்டித் தொடரின் அரையிறுதி போட்டிக்கான அணிகள் தெரிவாகியுள்ளன. அதன்படி, தம்புள்ளை விகிங்ஸ், கொழும்பு கிங்ஸ், யாழ்ப்பாணம் ஸ்ராலியன் மற்றும் காலி கெலடியேடர்ஸ் ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

## தமிழக வீரர் நடராஜனுக்கு அவுஸ்திரேலிய வீரர் டேவிட் வார்னர் வாழ்த்து!

கிரிக்கெட் வலைபயிற்சிக்காக வந்த வீரர் இந்திய அணிக்காக விளையாடுவது என்பது மிகப்பெரிய சாதனை என தமிழக வீரர் நடராஜனுக்கு அவுஸ்திரேலிய வீரர் டேவிட் வார்னர் வாழ்த்து தெரிவித்துள்ளார். இருபதுக்கு 20 தொடரில் அபாரமாக பந்துவீசி அணியின் வெற்றிக்கு வித்திட்ட நடராஜனுக்கு அனைத்து தரப்பிலும் இருந்து பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

இந்நிலையில், ஐபிஎல்-ல் நடராஜன் விளையாடிய ஐதராபாத் அணியின் கேப்டனாக இருந்த அவுஸ்திரேலிய வீரர் வார்னர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவிடம் தங்கள் அணி தோல்வி அடைந்தாலும், நடராஜனின் சாதனையை நினைத்து அளவற்ற மகிழ்ச்சி கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.




## அபுதாபி கிராண்ட்பிரிஸ் பந்தயத்தில் பற்றி எரிந்த கார்!

அபுதாபியில் அண்மையில் நடந்த கார் பந்தயத்தில் பங்கேற்ற முன்னாள் உலக சம்பியன் கிமி ரெய்க்கோனன் (Kimi Raikkonen) அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். பார்முலா ஒன் கார் பந்தயங்கள் தற்போது அபுதாபியில் நடந்து வருகின்றன. இதில் அமெரிக்காவைச் சேர்ந்த கிமி ரெய்கோனன் அசுர வேகத்தில் ஓட்டிச் சென்ற போது காரின் பின்பக்கத்தில் தீப்பிடித்தது.

இதனைக் கண்ட கிமி ரெய்கோனன் சாமர்த்தியமாக பந்தயப் பாதையிலிருந்து விலகி காரினை ஓட்டிச் சென்று நிறுத்தினார். தொடர்ந்து கொழுந்து விட்டு எரிந்த காரிலிருந்து வெளியேறி உயிர் தப்பினார்.



# உலக செய்திகள்

## இஸ்ரேலில் 27ஆம் திகதி முதல் மக்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்படும்!

இஸ்ரேலில் எதிர் வரும் 27 ஆம் திகதி முதல் பொதுமக்களுக்கு கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசி செலுத்தப்படுமென இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு (Benjamin Netanyahu) அறிவித்துள்ளார். பைசர் நிறுவனத்திடம் இஸ்ரேல் அரசாங்கம் செய்திருந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொரோனா தடுப்பூசிகளின் முதல் தொகுதி தற்போது டெல்அவிவ் வந்து சேர்ந்துள்ளது.



இதனை பார்வையிட்ட பெஞ்சமின் நேதன்யாகு, நாள் ஒன்றுக்கு சுமார் 60 ஆயிரம் பேருக்கு கொரோனா தடுப்பூசியை செலுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். இதன் மூலம் மக்கள் மீண்டும் சுதந்திரமாக பயணங்களை மேற்கொள்ளலாம் என்றும் நாட்டின் பொருளாதரம் மீண்டும் முன்னேற்றமடையும் என்றும் இஸ்ரேல் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## கொரோனா வைரஸ் காலத்தில் பாடசாலைகளை மூடியதால் பாதிப்புகளே அதிகம்

கொரோனா வைரசினை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக பாடசாலைகளை மூடும் நடவடிக்கை தவறானது என யுனிசெவ் அமைப்பு தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ்காலத்தில் பாடசாலைகள் குறித்து நாங்கள் அறிந்துள்ள விடயம் தெளிவானது பாடசாலைகளை திறந்து வைத்திருப்பதால் ஏற்படும் நன்மைகள் பாடசாலைகளை மூடுவதால் கிடைக்கும் நன்மைகளை விட அதிகம் என்பதே அது என யுனிசெவ் அமைப்பின் உலக கல்வி பிரிவின் தலைவர் ரொபேர்ட் ஜென்கின்ஸ் தெரிவித்துள்ளார். என்ன நிலையிலும் பாடசாலைகளை மூடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். பாடசாலைகளை மூடுவது கொரோனாவிற்கு எதிரான போராட்டத்திற்கு உதவவில்லை மாறாக சிறுவர்களுக்கு கல்வி ஆதரவு பாதுகாப்பு உணவு ஆகியவற்றை வழங்கிய முறையை அகற்றியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



பாடசாலைகளை மூடுவதற்கு பதில் அரசாங்கங்கள் பாடசாலைகளை மீள திறப்பதற்கும் அவற்றை பாதுகாப்பானவைகளாக்குவதற்கும் முன்னுரிமை வழங்கவேண்டும் என யுனிசெவ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாடசாலைகள் மூலம் கொரோனா வைரஸ் பரவவில்லை என்பது புலனாகியுள்ளது என குறிப்பிட்டுள்ள யுனிசெவ் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்தவுடன் உடனடியாக முதல் நடவடிக்கையாக அரசாங்கங்கள் பாடசாலைகளை மூடும் போக்கினை அவதானிக்க முடிகின்றது எனவும் தெரிவித்துள்ளார். சிலநாடுகளில் சமூகங்கள் சமூகங்களாக இதனை முன்னெடுப்பதற்கு பதில் தேசிய அளவில் இதனை செய்கின்றனர்.என தெரிவித்துள்ள ஜென்கின்ஸ் இதன் காரணமாக சிறுவர்களின் கற்றல் உள.உடல் மற்றும் பாதுகாப்பு ஆகியன மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார். பாடசாலைகள் மூடப்படுவதால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 38 வீதமாக நவம்பர் மாதத்தில் அதிகரித்து காணப்பட்டது என யுனிசெவ் தெரிவித்துள்ளது. நாங்கள் பிழையான திசையில் நகருகின்றோம்.மிகவேகமாக நகருகின்றோம் என சிரேஸ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## டைம் பத்திரிகையின் 2020ஆம் ஆண்டுக்கான சிறந்த நபராக ஜோ பைடனும், கமலா ஹாரிசும் தெரிவு!

டைம் பத்திரிகையின் 2020ம் ஆண்டுக்கான சிறந்த நபராக அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோ பைடனும், துணை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கமலா ஹாரிசும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 1927ம் ஆண்டு முதல் செய்திகளில் அதிகம் பேசபடுவோரை தெரிவு செய்து, டைம் பத்திரிகை விருது அளிக்கிறது.

அந்தவகையில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடனும், துணை ஜனாதிபதித் தேர்தலில் தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட கமலா ஹாரிசும் வெற்றி பெற்றனர்.




## 250 மில்லியன் டொலர்களை நன்கொடையாக வழங்கிய பில்கேட்ஸ்!

உலகை அச்சுறுத்திவரும் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் பணிகளுக்காக, 250 மில்லியன் டொலர்களை பில்கேட்ஸ் அன்ட் மெலிண்டா (Bill & Melinda Gates Foundation) அறக்கட்டளை நன்கொடையாக வழங்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து மைக்ரோசாஃப்டின் ஸ்தாபகர் பில்கேட்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் 'உலகின் பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்புப் பணிகளில் உதவுவதற்காக, 250 மில்லியன் டொலர்கள் நன்கொடை அளிக்கப்படவுள்ளதாக' தெரிவித்துள்ளார். மேலும் இந்த நன்கொடையின் ஒரு பகுதி, பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆபிரிக்க நாடுகளில் கொரோனா தடுப்பூசி விநியோகிப்பதற்குப் பயன்படுத்தப்படும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.




## ஆப்கானிஸ்தானில் பெண் பத்திரிகையாளர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்

ஆப்கானிஸ்தானில் பெண் பத்திரிகையாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மலாலா மைவன்ட் என்ற பத்திரிகையாளரும் அவரது கார்ச்சாரதியும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதை அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். எனிகாஸ் தொலைக்காட்சி வானொலி ஊடக நிறுவனத்தில் பணியாற்றிய மலாலா மைவன்ட் அலுவலகம் சென்றுகொண்டிருந்தவேளை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அவரது வாகனம் இனந்தெரியாதவர்களால் இலக்குவைக்கப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தாக்குதலை மேற்கொண்டவர்கள் அந்த பகுதியிலிருந்து தப்பிச்சென்றுவிட்டனர் என ஜலாலாபாத்தின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சமூக ஆர்வலராகவும் காணப்பட்ட மலாலா ஆப்கானில் பெண்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்து வெளிப்படையாக கருத்து தெரிவித்து வந்தவர் சமூக செயற்பாட்டாளரான அவரது தாயரும் ஐந்து வருடங்களுக்கு முன்னர் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். ஆப்கானிற்கான பிரித்தானிய தூதுவர் அலிசன் பிளேக் இந்த கொலையை கண்டித்துள்ளார். இந்த கொலை குறித்து விசாரணைகள் இடம்பெறவேண்டும் என தெரிவித்துள்ள அவர் கொலையாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





## கானாவில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 'நானா அகுபோ' வெற்றி!



கானா (Ghanas) ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியான நானா அகுபோ அடோ. (Nana Akufo Addo ) குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மீண்டும் தனது பதவியை தக்க வைத்துக்கொண்டுள்ளார். ஆபிரிக்க நாடான கானாவில் கடந்த திங்கட்கிழமையன்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி நானா அகுபோ அடோ குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஜனாதிபதி பதவியை தக்க வைத்துக்கொண்டுள்ளார். அவருக்கு 51.6 % வாக்குகள் கிடைத்தன. ஜான் மகாமாவுக்கு 47.4 % வாக்குகள் விழுந்துள்ளன. இரண்டாவது முறையாக கானாவில் நானா அகுபோ அடோ ஜனாதிபதி ஆவதை அவரது ஆதரவாளர்கள் நாடு முழுவதும் கொண்டாடி வருகின்றனர்.

# வவுனியாவில் புதிய முயற்சியாக “கால்நடைகளுக்கான தீவன உற்பத்தியுடன் கூடிய பண்ணை” ஆரம்பம்

வவுனியாவில் புதிய முயற்சியாக கோழிக்கான தீவனம் உள்ளிட்ட அனைத்து கால்நடைகளுக்குமான தீவனங்களை உற்பத்தி செய்யும் ஆலையுடன் கூடிய ஒன்றிணைந்த பண்ணை ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. ARS Farms (Pvt) Ltd எனும் பெயரில் வவுனியா, வெங்கலச் செட்டிகுளம் பிரதேசத்தில் சங்கராபுரம் எனும் கிராமத்தில் கடந்த (09-12-2020) குறித்த ஒன்றிணைந்த பண்ணை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் திரு.சிவகரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக சங்கராபுரம் கிராம உத்தியோகத்தர் திரு பாலசிறிதரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பண்ணை செயற்பாடுகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்கள். வடக்கில் குறிப்பாக வன்னியில் உற்பத்தியாகும் மூலப்பொருட்களைக் கொண்டு கால்நடைகளுக்கான தீவனத்தை உற்பத்தி செய்து குறித்த பண்ணையில் வளர்க்கப்படும் கோழிக்குஞ்சுகளின் உணவுத்தேவையை பூர்த்தி செய்வதோடு எதிர்காலத்தில் குறைந்த விலையில் உள்ளூர் பண்ணையாளர்களுக்கும் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதுன், இதன் மூலம் பலருக்கு நிலையான தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் தற்போது பணியின் நிமித்தம் கொழும்பில் வசித்து வருபவர்களுமான பொறியியலாளர் திரு. கோ.ரஞ்சித்குமார் , வைத்திய கலாநிதி திருமதி. ர.சிந்துஜா தம்பதியினரின் நிதிப் பங்களிப்புடன் உருவாக்கம் பெற்றுள்ள குறித்த ஒன்றிணைந்த பண்ணையானது திரு. வைத்திலிங்கம் அவர்களது முகாமைத்துவத்தின் கீழ் செயற்படுத்தப்படவுள்ளது.




















## பாதுகாக்கப்பட வேண்டிய “அலையாத்தி காடுகள்”

உலகில் வாழும் உயிரினங்கள் ஆண்டு தோறும் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றன. குறிப்பாக வெள்ளம். கடல் அரிப்பு. கடல்நீர் உட்புகுதல். பேரலைகள். புயல்கள். சூறாவளி போன்ற இயற்கை சுழற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இது இயற்கை தான். ஆனால் இந்த இயற்கை நிகழ்வு. பெரும் துயரமாக மாறுவதற்கு காரணம். மனிதர்கள் இயற்கையை பாதுகாக்காமல் அழிப்பதுதான். அந்த வகையில் மேற்கண்ட அனைத்தையும் தடுக்கும் ஒரு இயற்கை வரமாக இருப்பதே அலையாத்தி தாவரங்கள்.



கடலும். நிலமும் இணையும் இடங்களில் வளரக்கூடிய இந்த அலையாத்தி காடுகள். சீற்றம் கொண்ட கடல் அலைகளை தடுக்கின்றன. கடல் அரிப்பை முறியடிக்கின்றன. நீரும் இல்லாமல். நிலமும் இல்லாமல் சேறுபோல இருக்கக்கூடிய இடத்தில் வளரும் இவை. 80 வகையான இனங்களை கொண்டவை. இந்தியாவில் கங்கையாற்றுப் படுகையான சுந்தரவனத்தில் இந்த அலையாத்தி காடுகள் காணப்படுகின்றன. உலகின் பல்வேறு பகுதிகளில் இந்த அலையாத்திகள் காணப்பட்டாலும். சுந்தரவனத்தில் காணப்படுவதே மிகப் பெரியதாகும்.

இவை புயல்கள் மற்றும் சூறாவளிகளிடம் இருந்து நம்மை காக்கும் எனவும். புயல் காலங்களில் விலங்குகளுக்கு வாழ்விடமாக அமையும்.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 13.12.2020 அன்று வெளியிடப்பட்டது.